விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 | வள்ளுவர் ஆண்டு 2037 | மாசி 03 புதன்கிழமை (15.02.2006) | தொலைபேசி 222 3378 | ஒலி 58

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

# மகிந்தவின் சிந்தனையின்படியே ஜெனீவாவில் பேசப்பட வேண்டும்

## ஜே.வி.பி. ஜனாதிபதியிடம் வலியுறுத்தல்

(கொழும்பு)

மகிந்தவின் சிந்தனையில் சமாதான நடவடிக்கைகள் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளன. அதற்கமையவே ஜெனீவாவில் நடைபெறவுள்ள பேச்சுக்களும் இடம் பெறவேண்டும். முன்னைய அமைதி முயற்சிகளை அரசாங்கம் உடனடியாக கைவிட்டு புதிய அணுகு முறையிலேயே விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டுமென ஜே.வி.பி.அரசாங்கத்தை கோரியுள்ளது.

நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே ஜே.வி.பியின் இக்கருத்து வெளியிடப்பட்டுள்ளது. இம் மாநாட்டில் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க, பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா, பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ ஆகியோர் கலந்து கொண்டனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் பிரதிநிதியை தெரிவுசெய்வதில் தொடர்ந்தும் கட்சி இடையே இழுபறிநிலை

(கொழும்பு)

அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்கும் இடையில் ஜெனீவாவில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் முஸ்லிம் பிரதிநிதியை தெரிவு செய்வதில் அரசாங்கம் சிக்கலை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பேச்சில் கலந்து கொள்ளவுள்ள முஸ்லிம் பிரதிநிதி தெரிவுசெய்யப்பட்டுள்ள போதிலும் சில முஸ்லிம் கட்சிகள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருவதாக தெரிவிக்கப்பட்டது.

அமைச்சர் அதாவுல்லா மற்றும் பேரியல் அஷ்ரப் ஆகியோர் அமைச்சர் பௌசியுடன் செல்வதென ஒரு [...] மட்டும் செல்வதென மற்றொரு யோசனையும் முன்வைக்கப்பட்டுள்ளது.

நேற்று முஸ்லிம் பிரதிநிதியை தெரிவு செய்வதற்காக பாராளுமன்றில் நடைபெற்ற முஸ்லிம்கட்சிகளின் மாநாட்டில் இவ்விரு யோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

இது குறித்து ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதுகுறித்து ஜனாதிபதியே இறுதி முடிபு எடுப்பார் எனவும் போக்குவரத்து அமைச்சர் ஏச்.எம்.பௌசி தெரிவித்தார்.

பேச்சில் கலந்து கொள்ளும் [...]

## தாயகக் கோட்பாட்டை ஏற்காமல் பிரச்சினைக்குத்தீர்வு காணமுடியாது

### தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தமிழர் தாயகக்கோட்பாட்டை ஏற்காமல் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ முயன்றால் மீண்டுமோர் யுத்தம் உருவாகுமென்று தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

பாரம்பரிய தாயகத்தை நிராகரித்து விட்டு தீர்வு உருவாக்கப்படுவதை நாங்கள் ஒருபோதும் ஏற்க மாட்டோம். தாயக கோட்பாடு நிராகரிக்கப்பட்டால் பேச்சுக்கள் சீர்குலையும், யுத்தம் மீண்டும் உருவாகும் என கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

ஜனாதிபதி தனது கொள்கைகளை மாற்றி தமிழ் மக்களுக்கு தனிநாடு வழங்குவது குறித்து யோசிக்கவேண்டுமென அவர் தெரிவித்தார் தமிழர் தாயகக்கோட்பாட்டை நிராகரித்து ஒற்றையாட்சியின் கீழேயே தீர்வுகாணப்படுமென ஜனாதிபதி மகிந்த ரொய்ட்டருக்கு அளித்த செவ்வியில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-39)

## பாராளுமன்றச் செயற்பாடு

## உள்ளூராட்சித் தேர்தலில்

பேரியல் அஷ்ரப் ஆகியோர் அமைச் சர் பௌசியுடன் செல்வதென ஒரு யோசனையும், பேரியல் அஷ்ரப்

தெரிவித்தார்.

பேச்சில் கலந்து கொள்ளும் முஸ்லிம் (12 ஆம் பக்கம் பார்க்க)

# நாட்டில் அமைதியை நிலைநாட்டவே அவசரகாலச் சட்டம் அமுலானது

## பிரதமர் ரட்ணசிறி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் தூரநோக்குட னான செயற்பாட்டினால் விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தைக்கு அழைக்க முடிந்தது என பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க தெரிவித் தார்.

அதன் அடிப்படையில் பேச்சு வார்த்தை சுவிஸ்லாந்தின் ஜெனீ வாநகரில் நடாத்த முடிந்தது என அவர் தெரிவித்தார். நாட்டில் சமா தானத்தை ஏற்படுத்துவதற்கான ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவின் ஒரு முயற்சியாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவசர கால நிலைமையை ஒரு மாத காலத்திற்கு நீடிப்பதற்கான பிரேரணை மீதான விவாதத்தின் போதே பிரதமர் இதனைத்தெரிவித் தார். அவர் மேலும்தெரிவிக்கை யில், கடந்த ஜனவரி மாதத்தில் இடம் பெற்ற தீவிரவாத நடவடிக்கைக ளால் பாதுகாப்புப்பிரிவினர் உட்பட 36 பேர் கொலை செய்யப்பட்டுள் ளனர். 104 கொலை முயற்சிகளும் இடம் பெற்றுள்ளன.

38 துப்பாக்கிச் சூட்டுச்சம்பவங் கள் மற்றும் கைக்குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன. இதனால் நாட்டில் சட்டத்தையும் அமைதியையும் அரச உடைமைக ளையும் பாதுகாக்க அவசரகால சட்டத்தின் அவசியம் நிலவுவதாக பிரதமர் மேலும் தெரிவித்தார். (சு-39)

# பாராளுமன்றச் செயற்பாடு 3ஆம் திகதி வரை ஒத்திவைப்பு

பாராளுமன்ற செயற்பாடுகள் எதிர்வரும் 3ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றம் நேற்றுக் காலை சபாநாயகர் பிள்யூ ஜெ.எம்.லொக்குபண்டார தலைமையில் கூடியது. ஆரம்பத்திலேயே இவ்வார சபை அமர் வுகள் நேற்று மட்டுமே நடைபெறும் என அவர் அறிவித்தார்.

இதனையடுத்து அவசர காலச்சட்ட விவாதம் இடம் பெற்றதுடன் சபை நடவடிக்கைகளை அடுத்த மாதம் 3ஆம் திகதி வரை ஒத்திவைத்ததாக சபா நாயகர் அறிவித்தார். (சு-39)

# உள்ளூராட்சித் தேர்தலில் 90 சதவீதமான பிக்குகள்

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத்தேர்தலில் வடக்கு கிழக்கு உட்பட 15 மாவட்டங்களில் தெரிவுசெய்யப்பட்ட 75 உள்ளூராட்சிசபை களில் சங்கு சின்னத்தில் ஜாதிக ஹெல உறுமய போட்டியிட வுள்ளது. மேற்படி உள்ளூராட்சி சபைகளில் போட்டியிட வுள்ள வேட்பாளர்களின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட்டு விட்டதாகவும் இன்று முதல் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படும் என் றும் ஜாதிக ஹெல உறுமயவின் பிரசார செயலாளர் நிசாந்த சிறி வர்ணசிங்க தெரிவித்தார்.

இம்முறை உள்ளூராட்சி (12 ஆம் பக்கம் பார்க்க)

# அவசரகாலச் சட்டம் நேற்று வாக்கெடுப்பின்றி நிறைவேற்றம்

(கொழும்பு)

அவசர காலச்சட்டப் பிரேரணை வாக்கெடுப் பின்றி நேற்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. நேற்று பாராளுமன்றம் கூடியபோது அவசரகாலச் சட்டப் பிரேரணையை பிரதிப் பாதுகாப்பு அமைச் சரும் பிரதமருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்க சமர்ப்பித்தார்.

இதனையடுத்து பிரேரணை மீதான விவாதம் 11.45 மணிவரை நடைபெற்றது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் சபை நடவடிக்கைகளை பகிஷ்கரித்தமையினால் விவாதத்தில் கலந்து கொள்ளவில் லை. அவர்கள் பாராளுமன்றத்திற்கு வெளியில் நின்று பகிஷ் கரிப்பில் ஈடுபட்டனர்.

அவசர காலச் சட்டப்பிரேரணையை வாக்கெடுப்புக்கு விடுமாறு எவரும் கோராததினாலேயே வாக்கெடுப்புக்கு விடாமல் அப்பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

(சு-39)




நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# உளவளத்துணைப் பணியில் அன்னை இல்லம் 10 ஆண்டு நிறைவு சேவைக்கு புலிகள் பாராட்டு

(கிளிநொச்சி)

எமது தாயகப்பிரதேசத்தில் உளவியல் பாதிப்பிலிருந்து விடுபட அன்னை இல்லம் கடந்த 10 ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க சேவையினை ஆற்றியுள்ளது என தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சியில் இயங்கும் உளவளத்துணை நிறுவனமான அன்னையில்லம் தனது பத்தாண்டு நிறைவை கொண்டாடிய நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எமது தாயகப் பிரதேசத்தில் சுனாமி பாதிப்பு ஏற்பட்ட பிரதேசங்களிலும் கிராம மட்டத்திலும் உளவளத் துணைப் பணியாளர்கள் மக்களை உளவளப் பாதிப்பில்லாது மக்களை மீட்கும் பணியில் சேவையாற்றியுள்ளமையை விடுதலைப் புலிகள் சார்பில் பாராட்டுவதாகவும் தங்கன் குறிப்பிட்டுள்ளார்.

கனகாம்பிகைக் குளத்திலுள்ள அன்னையில்ல வளாகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு முல்லை வலயக்கல்விப்பணிப்பாளர் ப.அரியரெத்தினம் தலைமை தாங்கினார். ஆரம்ப நிகழ்வைத் தொடர்ந்து அன்னையில்லத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பயிற்சி மண்டபம் திறந்துவைக்கப்பட்டது.

சிறுவர் பாதுகாப்பு நிறுவனப் பொறுப்பாளர் ஸ்ரீனா காண்ஸ் பயிற்சி மண்டபத்தின் நாடாவினை வெட்டித்திறந்துவைத்தார். (கு)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கராத்தே சங்கத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக் கூட்டம் சங்கத்தலைவர் சென்செய் மோகன் வின்சன் தலைமையில் இடம்பெறுவுள்ளது.

எனவே யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து கராத்தே சங்க உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு செயலாளர் சென்செய் ரி.துஷானந் தெரிவித்துள்ளார்.

(க-132,133)

# எஸ்.பி.சமர்ப்பித்த மனுவை உயர் நீதிமன்றம் நிராகரித்தது

முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க தமது பாராளுமன்ற ஆசனத்தை செல்லுபடி அற்றதாக்குவதைத் தடுக்கும்படி கோரி சமர்ப்பித்த மனுவை உயர்நீதிமன்றம் நிராகரித்தது.

பதில் பிரதம நீதியரசர் நிஹால் ஜயசிங்க தலைமையிலான மூன்று அங்கத்தவர் கொண்ட உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழு இந்தத் தீர்மானத்தை எடுத்தது.

மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, திஸநாயக்க மீதான சிறைத்தண்டனை குற்றவியல் நீதிக் கோவையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட குற்றத்துக்காக விதிக்கப்பட்டது அல்லதென்பதால், அவரது பாராளுமன்ற அங்கத்துவத்தை நீக்கத் தேவையில்லை என்று வாதிட்டார்.

சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிஷிற்றர் ஜெனரல், நீதிமன்றத்தை அவமதித்தமை. குற்றவியல் சார்ந்த குற்றமாகவே கருதமுடியுமென்றார்.

இதனையடுத்து உயர் நீதிமன்றம் அவரது மனுவை நிராகரித்தமை குறிப்பிடத்தக்கது. (க-7)

# வாராந்த நிகழ்வு

தொண்டைமானாறு செல்வசந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் நடாத்தப்படும் வாராந்த நிகழ்வு தொடரில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மு.ப.10.30 மணியளவில் சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் ஆன்மீக சொற்பொழிவாற்றுவார். (க-35)

# யுத்தநிறுத்த உடன்படிக்கையில் கருணா குழு உள்ளடங்காது!

## அரச சட்டத்தரணிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தநிறுத்த உடன்படிக்கையில் கருணா குழுவினர் உள்ளடங்கப்பட மாட்டார்கள் என்று அரசாங்கத்திற்கு அரச சட்டத்துறை தெரிவித்துள்ளது.

இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட போது துணை இராணுவக் குழுவினராக கருணா குழு இல்லை என்றும் அரச சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர். விடுதலைப்புலிகளின் கோரிக்கைக்கு அரசாங்கம் இணங்க முடியாது என்றும் கருணா குழுவினரை நிராயுதபாணிகளாக்குமாறு கோரும் யுத்தநிறுத்த சரத்து 1.8 பிரிவின் கீழ் கருணா குழுவினரை கோர முடியாது என்றும் சட்டத்துறையினர் கூறியுள்ளனர்.

ஜெனீவா பேச்சுவார்த்தைகளில் துணை இராணுவக் குழுவினரது ஆயுதக்களைவு கோரிக்கையை விடுதலைப் புலிகள் முன்வைக்கும்போது அதற்குப் பதிலளிப்பதற்காக அரசாங்கம் இந்தக் கருத்தை முன்வைக்கவுள்ளதாக கூறப்படுகிறது.

இருப்பினும் இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுக்கள் என்றே யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படுவதால் அனைத்து துணை இராணுவக் குழுக்களுமே அந்த சரத்துக்கு உடன்பட்டவர்கள் என்றும் ஆயுதக்குழுக்களை களைவதை விட்டு அரசாங்கம் துணை ஆயு தக்குழுக்களை உருவாக்குவதிலேயே தீவிரம் காட்டுவதாகவும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

கருணா குழு தொடர்பாக அரசாங்கம் இத்தகைய கருத்தை முன்வைத்தால்விடுதலைப்புலிகள்உரிய பதில் கொடுப்பார்கள் என்றும் கூட்டமைப்புவட்டாரங்கள் தெரிவித்தன. (இ)

# இராசிபலன்

15.02.2006
(மாசி 03, புதன்கிழமை)
துதியை பிற்பகல் 3.03மணிவரை
பூரம் பிற்பகல் 03.08மணிவரை
இராகுகாலம் 12.33-2.03மணிவரை
சுபநேரம் 05.03-06.33 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | தாழ்ந்த சுபாவம், காரிய இடையூறு, பணவிரயம், போசன சுகக்குறைவு. |
| இடபம் | கல்வியில் ஆர்வம், பயந்த சுபாவம், ரோக நிலை, அற்பர்நேசம். |
| மிதுனம் | இனிய அனுபவம், கூட்டு முயற்சி, வாக்கு மேன்மை, பணவசதி. |
| கடகம் | மதிப்புக்குறைவு, காரிய தாமதம், பொருள் விரயம், உணர்ச்சிவசப்படுதல். |
| சிங்கம் | பெரியோர் ஆசி, நல்ல முயற்சி, ஆழ்ந்த சிந்தை, சயனசுகம். |
| கன்னி | பிதாசிந்தை, பணவிரயம், வாக்கு மேன்மை, முயற்சி தாமதம். |
| துலாம் | காரிய அனுகூலம், பெருமையடைதல், மனமகிழ்ச்சி, பொருள்சேர்க்கை. |
| விருச்சிகம் | தொழில் மேன்மை, காரியசித்தி, போசன சுகம், நண்பர்கள் சந்திப்பு. |
| தனுசு | ஆன்றோர் மதிப்பு, பிரயாணம், உடல் நலக்குறைவு, அச்சமான நிலை. |
| மகரம் | காரிய தடங்கல், வீண்தொல்லை, அபகீர்த்தி, போசனசுகம். |
| கும்பம் | வாகனவசதி, திடீர் பயணம், அபூர்வ சந்திப்பு, பணவருவாய். |
| மீனம் | தொழில் நன்மை, சுகவாழ்வு, பகைவர் நேசம், காரிய சித்தி. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

# 30 பரப்புக் காணியில் 25 குடும்பங்கள்

## காணியைப் பகிர்ந்தளிக்கக் கோரிக்கை

அராலி ஊரத்தியிலுள்ள அரச காணிகளில் சுமார் 35வருடங்களுக்கு மேலாகக் குடியிருக்கும் 25 குடும்பங்களுக்கு காணியைப் பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என மேற்படி காணியில் குடியிருப்போர் கவலை தெரிவித்துள்ளார்கள்.

இதனால் இக் குடும்பங்கள் வீடு, மலசல கூடம் முதலியவற்றை நிர்மாணிக்க முடியாது கஷ்டப்படுகிறார்கள். வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குச் சொந்தமான அராலி ஊரத்தியிலுள்ள காணியில் வறுமை நிலையிலுள்ள சுமார் 25குடும்பங்கள் 35 வருடங்களாக வசித்து வருகிறார்கள்.

சுமார் 30 பரப்பளவு கொண்ட இக் காணியை இந்த 25குடும்பங் களும் வேலியடைத்துப் பரா மரித்து வருகின்றனர். இக் குடும்பங்களுக்கு 30பரப்புக் காணியையும் பகிர்ந்தளிக்க பல தடவைகள் வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கு பல மகஜர்கள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் எத்தகைய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மழை காலங்களில் குடிசைகளுக்குள் வெள்ளம் புகுவதனால் தாங்கள் மிகவும் பாதிக்கப்படுவதாகவும், அரச சார்பற்ற நிறுவனங்கள் வீடுகள், மலசல கூடங்கள் அமைப்பதற்கு முன்வந்த போதிலும் சொந்தமாகக் காணி இல்லாத காரணத்தால் அத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியவில்லையெனவும் அவர்கள் விசனம் தெரிவிக்கிறார்கள்.

ஆனால் அக் காணிகளில் குடியிருப்போரிடமிருந்து மேற்படி பிரதேசசபை உத்தியோகத்தர்கள் வருடாவருடம் சோலைவரி வசூலித்து வருவதாகவும் அவர்கள் விசனம் தெரிவிக்கிறார்கள்.

இனியும் காலம் தாழ்த்தாமல் இந்தக் காணியைத் தங்களுக்கு பகிர்ந்தளிக்க நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (து)

# பேச்சுக்களை வெற்றிபெறச் செய்வதில் பொது மக்களுக்கும் முக்கிய பங்குண்டு

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை வெற்றி பெறச் செய்வதில் பொது மக்களுக்கும் முக்கிய பங்குண்டு என்று ஐரோப்பிய சமூகத்தின் 'ஸ்பே' அமைப்பின் இலங்கையின் சமாதான வழிமுறைகளுக்கான பேச் சாளர் ரஞ்சித் சொய்சா தெரிவித்தார்.

அரசியல் கருத்து வேறுபாடுகளைக் கைவிட்டு, சகல தரப்பினரும் அரசாங்கத்தின் சமாதான நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப் பது முக்கியமான அம்சமாகும். அவர் தொடர்ந்து கருத்துத் தெரி விக்கையில்,

சமாதானப் பேச்சுக்கள் அனைத்தும் வெளிப்படையாக இடம்பெறுவது முக்கியமானது என்றும், இக்கட்டான இந்தச் சந்தர்ப்பத்தில் இரு தரப்பினரும் விட்டுக்கொடுக்கும் போக்கை கடைப்பிடிப்பது அவசியம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (கு)

# நெல் கொள்வனவுக்கு 2 பில்லியன் ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

நெல்கொள்வனவு தொடர்பான சகல நடவடிக்கைகளும் இலங்கை கமநல உற்பத்தி சந்தைப்படுத்தல் அதிகார சபையூடாக மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கூறினார்.

பெரும்போகத்தின் போது நெல்கொள்வனவுக்கென திறைசேரி 2 பில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது. நெல் அறுவடை அதிகரிக்கும் பட்சத்தில் அதிகரித்த நெல்லைக் கொள்வனவு செய்வதற்கென மேலும் நிதி பெற்றுக்கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் காலை கொழும்பில் இடம்பெற்ற விசேட கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அறுவடை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட பல்வேறு மாவட்டங்களுக்கு இந்த நிதி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-7)




குருநகர் தூய பியோ விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் குருநகர் சென்.ஜேம்ஸ் மகளிர் கல்லூரியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் இருவர் இரத்த தானம் செய்வதைப் படத்தில் காணலாம்.

# பண்ணிசைப் போட்டியிலும், திருக்குறள் மனனப் போட்டியிலும் வெற்றி பெற்றோர்

(யாழ்ப்பாணம்)

புண்ணிய நாச்சியம்மையார் தினத்தை முன்னிட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை பாடசாலை மாணவர்களுக்கிடையே யாழ். சைவ பரிபாலன சபை நடத்திய பண்ணிசைப் போட்டியிலும், திருக்குறள் மனனப் போட்டியிலும் வெற்றி பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி பண்ணிசைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

கீழ்ப்பிரிவு

முதலாம் இடம்:- ரஜிதா சிவபாலன் - யா/ நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியா லயம்.

இரண்டாம் இடம்:- ஜெயசக்தி சிவலிங்கம்- யா/ இந்து ஆரம்ப பாடசாலை.

மூன்றாம் இடம்:- பவதாரணி தியாகராஜா- யா/ சத்தியசாயி பாடசாலை மானிப்பாய்.

மத்தியபிரிவு

முதலாம் இடம்:- தேவறூபி ஜெயக்குமார்- யா/ இராமநாதன் கல்லூரி.

இரண்டாம் இடம்:- சத்தியவாகீஸ்பரன் ரவிகரன் - யா/ சித்தங்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயம்.

மூன்றாம் இடம்:- அ.சண்முகப்பிரியன்- யா/ யூனியன் கல்லூரி.

மேற்பிரிவு

முதலாம் இடம்:-காயத்ரீ சிறிகந்தவேல்- யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

இரண்டாம் இடம்:- சங்கீதா சந்திரகுமார்- யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி.

மூன்றாம் இடம்:- அழகேசன் அமிர்தசிந்துஜன் - யா/ இணுவில் மத்திய கல்லூரி.

திருக்குறன் மனனப் போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம்,

முதலாம் இடம்:- மைதிலி. சி- யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்.

இரண்டாம் இடம்:- கோகிலா ஆனந்தராஜா- யா/கோண்டாவில் இந்துமகாவித்தியாலயம்.

மூன்றாம் இடம்:- தாரணி சத்தியமூர்த்தி யா/ நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி.

மேற்படி மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் வைபவம் எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் இல.66, கல்லூரி வீதியில் அமைந்துள்ள சைவ பரிபாலன சபை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

சைவப்புலவர் கலாநிதி வ.கந்தசாமி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ்.கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் பொ.கமலநாதன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்களை வழங்குவார். (க)

## கூட்டம்

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் பாவனையாளர் ஒருங்கிணைப்புக்குழு அங்குரார்ப்பண கூட்டம் எதிர்வரும் 22ஆம் திகதி புதன்கிழமை பி.ப 3 மணிக்கு பிரதேச செயலர் ஏ.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பாவனையாளர் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனம் கண்டு அவற்றிற்கான தீர்வுகளை மேற்கொள்ள வசதியாக இந்தக் குழு அமைக்கப்படவுள்ளது.

பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிராம சேவகர் பிரிவிலிருந்து இரண்டு பேர்கள் தெரிவு செய்து குழுக்கள் அமைக்கப்படும். இக்குழுக்கள் மூலம் பாவனையாளர்களின்பிரச்சினைகளைஆராய்ந்து தீர்வுகள் காணப்படும்.(க-35)

## வாழைக்குலைகள் திருட்டு

இணுவில் கிழக்கு மற்றும் மேற்கு பகுதியில் அமைந்துள்ள வாழைத்தோட்டங்களில் இரவு நேரங்களில் வாழைக் குலைகள் திருட்டுப் போவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் தாம் பெரும் நட்டத்தை எதிர் நோக்குவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (க-122)

## ஆன்மீக சொற்பொழிவு

(மருதங்கேணி)

பருத்தித்துறை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆலயத்தின் பகல் பூசை முடிவுற்றதும் 'மாயவனின் மாண்புகள்' எனும் விடயம் பற்றி ஆசிரியர் செ.செல்வரட்னா ஆன்மீக சொற்பொழிவாற்றுவார்.

ஆன்மீக நிகழ்வை தொடர்ந்து அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். (க-35)

### மிதிவெடி அபாயம் நீங்கும் வரை

# யாழ்.குடாநாட்டில் தொடர்ந்து பணியாற்ற ஹலோ டிரஸ்ட் விருப்பம்

யாழ்.குடாநாட்டில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை முற்றாக அகற்றும்வரை தனது பணிகளை தொடரப்போவதாக அறிவித்துள்ள ஹலோ டிரஸ்ட் நிறுவனம், இந்தப் பணிக்கு தனது நிறுவன ஊழியர்களின் தொடர்ச்சியான உற்சாகத்தையும், பொதுமக்களின் ஆதரவையும் வரவேற்பதாக தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக ஹலோ டிரஸ்ட் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மனிதாபிமான ரீதியாக மிதிவெடி அகழ்வுப் பணியில் ஈடுபட்டிருக்கும் ஹலோ டிரஸ்ட் நிறுவனம் 2005ஆம் ஆண்டு இறுதிவரை 30 ஆயிரம் தனிநபர் எதிர்ப்பு மிதிவெடிகளை அழித்து ஓர் எல்லையை எட்டியுள்ளது.

300க்கு அதிகமாக தமிழ் ஊழியர்களின் கடுமையான உழைப்பினால் இச்செயல் நிறைவேறியுள்ளது. ஹலோ டிரஸ்ட் நிறுவனம் யாழ்.குடாநாட்டில் மிதிவெடி அகழ்வுச் செயற்பாட்டில் ஈடுபட்டு வருவதோடு கடந்த வருடம் திருகோணமலையிலும் தனது செயற்பாட்டை மேற்கொண்டது.

அத்துடன் மிதிவெடி அகழ்வு நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக சுனாமி அனர்த்தத்தினால் பாதிப்படைந்த பிரதேசங்களிலும் தனது உதவிகளை வழங்கியது. மிதிவெடி அகழ்வுச் செயற்பாடுகள் யாழ்.குடாநாட்டில் இருபாலை, கோப்பாய், சிறுப்பிட்டி, சாவகச்சேரி, சண்டிலிப்பாய், தெல்லிப்பளை போன்ற பிரதேசங்களிலெல்லாம் மேற்கொள்ளப்படுகின்றன.

ஹலோ டிரஸ்ட் நிறுவனமும் ஏனைய மிதிவெடி அகழ்வு நிறுவனங்களும் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பயனாக 2002ஆம் ஆண்டு ஐம்பதிற்கும் அதிகமாக நிகழ்ந்த மிதிவெடி விபத்துக்கள் கடந்த வருடம் இருபதிற்கும் குறைவானதாகக் காணப்பட்டது.

ஹலோ நிறுவனமானது யாழ்.குடாநாட்டில் மிதிவெடி விபத்துக்கள் முற்றாக அழிக்கப்படும்வரை தனது பணிகளை வழங்குவதற்கு விரும்புகின்றது.

ஹலோ நிறுவனம் ஓர் நடுநிலையானதும் பிரித்தானிய நாட்டைச் சேர்ந்த மனிதாபிமான தருமஸ்தாபனமுமாகும்.

இந்நிறுவனம் மிதிவெடிகள், அத்துடன் போர் தளபாடங்கள், வெடிபொருட்கள் போன்றவற்றை அழித்தொழிக்கும் நோக்கமாக ஆப்கானிஸ்தான், செச்சினியா, சூடான் போன்ற பன்னிரண்டிற்கும் அதிகமான நாடுகளில் தனது பணியை வழங்கிவருகின்றது.

ஹலோ நிறுவனம் தனது ஊழியர்களின் தொடர்ச்சியான உற்சாகத்தையும், பொதுமக்களின் ஆதரவையும் என்றும் வரவேற்கின்றது என்றுள்ளது. (க)

# கல்வி அமைச்சில் தமிழ்ப்பிரிவு அமைக்க கல்வி அமைச்சர் ஒப்புதல்

(கொழும்பு)

கல்வி அமைச்சில் தமிழ்மொழி மூலக் கல்வி நலன் கருதி தமிழ்ப்பிரிவு அமைக்க நடவடிக்கை எடுப்பதாக கல்வி அமைச்சர் சுசில் பிறேமஜெயந்த உறுதியளித்துள்ளார்.

கடந்த வாரம் அமைச்சின் அலுவலகத்தில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தூதுக்குழு கல்வி உயர்கல்வி அமைச்சர் சுசில் பிறேமஜெயந்தவை இசுறுபாயாவில் உள்ள அமைச்சரின் அலுவலகத்தில் சந்தித்து தமிழ் மொழிமூல கல்விப் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடிய போதே அமைச்சர் மேற்படி உறுதிமொழியை வழங்கினார். இக்கலந்துரையாடலின் சங்கத் தூதுக்குழு கல்வி அமைச்சில் தமிழ்மொழிமூலக் கல்வியைப் பற்றிக் கவனிக்க எவரும் இல்லாததால் பல கோரிக்கைகளை முன்வைத்து கலந்துரையாடியது.

தமிழ்மொழி மூலக் கல்விக்கென ஒரு பிரதிப் பணிப்பாளர் நாயகம் நியமிக்கப்பட வேண்டும். இவர் கல்வி அமைச்சர், அமைச்சுச் செயலாளர் ஆகியோருடன் இணைப்பாளராக இருந்து ஆலோசனைகள் வழங்கிச் செயற்படுபவராக இருக்க வேண்டும்;

தமிழ்மொழிமூலக் கல்விக்கெனக் கல்விப் பணிப்பாளர் தரத்திலான பிரிவு கல்வி உயர் கல்வி அமைச்சில் அமைக்கப்பட வேண்டும்;

முஸ்லிம் பாடசாலைப் பிரிவு; தோட்டப் பாடசாலைப் பிரிவு ஆகியன பணிப்பாளர் தரத்திலான பிரிவுகளாகத் தரம் உயர்த்தப்படவேண்டும்;

சிங்கள மொழி, ஆங்கில மொழி ஆகியவற்றின் மேம்பாட்டிற்கு கல்விப் பணிப்பாளர் தரத்திலான மொழிப்பிரிவு போல் தமிழ் மொழி அபிவிருத்திக்கென கல்விப் பணிப்பாளர் தரத்திலான பிரிவு உருவாக்கப்பட வேண்டும்;

பௌத்த மதத்திற்கு அமைக்கப்பட்டுள்ள பணிப்பாளர் தரத்திலான பிரிவு போல் ஏனைய மதங்களை சைவசமயம், இஸ்லாமிய சமயம், கிறிஸ்தவ சமயம் ஆகியவற்றிற்கும் அமைக்கப்படவேண்டும்.

ஆகிய கோரிக்கைகள் அமைச்சர் முன் சமர்ப்பிக்கப்பட்டன.

சங்கத்தின் மேற்படி கோரிக்கைகளை தான் தனது சிபார்சுகளுடன், அமைச்சின் கீழ் கட்டுமானத்திற்கென நியமிக்கப்பட்டுள்ள குழுவிடம் சமர்ப்பிப்பதாகவும், அக்குழுவில் வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இரா.தியாகலிங்கத்தை தமிழ் மொழி மூலக் கல்வி அபிவிருத்தியின் நலன்களைக் கவனிக்க நியமித்துள்ளதாகவும் அவரிடமும் இக்கோரிக்களைச் சமர்ப்பிக்குமாறும் அமைச்சர் தூதுக்குழுவினரிடம் தெரிவித்தார் எனச் சங்கத்தின் தூதுக்குழுவிற்குத் தலைமை தாங்கிய சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார். (து)

# யானைச் சின்னத்தில் ஸ்ரீ.மு.கா போட்டி

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வடக்கு-கிழக்கு தவிர்ந்த சில பகுதிகளில் ஐக்கிய தேசியக் கட்சியின் யானைச் சின்னத்தில் போட்டியிட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போது இதற்கான இணக்கப்பாடு காணப்பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

அதேநேரத்தில் கொழும்பு, மாத்தளை, குருநாகல், புத்தளம், அக்மீமன, பேருவளை பிரதேசங்களில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்தே போட்டியிடவுள்ளது.

இதனிடையே மாத்தளை, கண்டி, நுவரெலியா மற்றும் பதுளை பகுதிகளில் அரசாங்கத்துடன் இணைந்து வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முடிவெடுத்துள்ளது.

இதர பகுதிகளில் மலைய மக்கள் முன்னணியுடன் இணைந்து உள்ளூராட்சி தேர்தலைச் சந்திக்கவுள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பேச்சாளர் ஆர்.யோகராஜன் தெரிவித்தார். (து)

## மெய் வல்லுநர் போட்டி

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் க.செல்வக்குமாரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

அன்னாரின் பாரியார் திருமதி அருந்தவமலர் தனபாலசிங்கம் பரிசில்களை வழங்குவார். (து)

# ஹெல உறுமயவினர் மீது ஜே.வி.பி தாக்குதல்

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயவினர் மீது ஜே.வி.பியினர் தாக்குதல் நடத்தியதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அனுராதபுரம் ஜாதிக ஹெல உறுமய அமைப்பாளர் மற்றும் கல்னெவ அமுனுகம சிறி போதிராஜராம விகாரையின் விமலதிச தேரர் ஜே.வி.பியினர் தாக்குதலுக்குள்ளாகி அனுராதபுரம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதையடுத்து பொலிஸாரிடம் ஜாதிக ஹெல உறுமயவினர் முறைப்பாட்டு மனு அளித்துள்ளனர்.

அதில் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் சகோதரர் உள்ளடங்கிய குழு விகாரையை தாக்கியதாகவும் அதில் தேரர் படுகாயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஜாதிக ஹெல உறுமயவினர் மீதும் ஜே.வி.பியினர் முறைப்பாடு செய்துள்ளதாக கல்னெவ பொலிஸார் தெரிவித்துள்ளனர். (து)

## இன்று ஒரு தகவல்

# முட்டாள்கள்

முட்டாள்களில் மூன்று வகை உண்டு என்கிறார் ஒரு பெரியவர். அது எப்படி? முதல்வகை முட்டாள்கள் எப்படியென்றால் அவர்களுக்கு உண்மையிலேயே ஒன்றும் தெரியாது. அது மட்டுமல்ல தனக்கு ஒன்றும் தெரியாது என்பது கூட அவர்களுக்குத் தெரியாது. மிகவும் அப்பாவிகள். இது சாதாரணவகை.

இரண்டாவது வகை எப்படியென்றால் இவர்களுக்கு எதுவுமே தெரியாது. அதேசமயம் தெரிந்தது போலக் காட்டிக்கொள்ளத்தெரியும். சங்கீதம் என்றால் என்னவென்றே தெரியாது. ஆனால் முதல் வரிசையில் உட்கார்ந்து கொண்டு தெரிந்தது போல் தலையை ஆட்டிக் கொண்டிருப்பார்கள். ஒன்றுமே தெரியாமல் ஆனால் தெரிந்தது போல் காட்டிக்கொள்ளும் இந்த இரண்டாவது வகை ஆசாமிகள் இருக்கின்றார்கள் பாருங்கள் அவர்கள் கொஞ்சம் படித்த முட்டாள்கள்.

மூன்றாவது வகை முட்டாள்கள் எப்படியென்றால் தனக்கு ஒன்றும் தெரியாது என்பது அவர்களுக்கு மட்டும்தான் தெரியும். இவர்களே ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் தான். ஒரு பூச்சியம் என்பது அவர்களுக்குத் தெரியும். நமக்குத்தெரியாது. நாம் அவர்களைப் பெரிய அறிவாளிகள் என்று மனப்பூர்வமாக நினைத்துக் கொண்டிருப்போம். பாமரர்கள், படித்தவர்கள், பெரிய மனிதர்கள் இவர்களுக்கு மத்தியில் இந்த மூன்று வகையான ஆசாமிகளையும் இன்று சர்வசாதாரணமாக நாம் கண்டுபிடிக்கலாம். ஆனால் அப்படிக்கண்டுபிடிப்பதற்கு நமக்குக் கொஞ்சம் புத்திசாலித்தனம் வேண்டும்.

இந்த உலகத்தில் ஒவ்வொருவரும் முதலில் ஒரு சாதாரண முட்டாளாகத் தான் பிறக்கிறார்கள். ஒவ்வொரு குழந்தையும் சாதாரண முட்டாள் தான். அவர்களுக்கு எதுவும் தெரியாது. தனக்கு எதுவும் தெரியாது என்பதும் அவர்களுக்குத் தெரியாது. ஆகையினால் அதெல்லாம் முதல் வகையைச் சேர்ந்ததுதான். அதன்பின் வளரவளர உலக விடயஞானம் என்ற பழத்தை உண்ண வேண்டியிருக்கிறது. விடயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

எளிமையான முட்டாள் தனத்திலிருந்து அறிவுள்ள முட்டாள் தனத்திற்கு ஒரு குழந்தை படிப்படியாகமாறுகிறது. பெரியவனாக ஆக ஆக சிலபேர் தெரியாததையும் தெரிந்தது போல் காட்டிக்கொள்ள தெரிந்து கொள்கிறான். சில பேர் தனக்குத் தெரியாது என்பதை மற்றவர்கள் தெரிந்து கொள்ளாமல் பார்த்துக் கொள்கிறார்கள். தான், தனது என்ற அகங்காரத்தின் உச்சிக்குச் செல்லும் போது ஒரு நாள் விழிப்பு நிலையில் எல்லாவற்றையும் ஒழித்துவிட்டு ஒன்றுமே இல்லாத தன்மையை அடையவேண்டும். மனம் இயங்கும் போது ஒருவன் உணர்வில் இயங்குவான் இது தான் அவனை ஞானத்தன்மைக்கு அழைத்துப் போகும் என்கிறார் ஓஷோ.

நண்பர் ஒருவர் ஒரு கதைசொன்னார். ஒரு பெரிய மனிதனுக்கு ஒரு வேலைக்காரன் இருந்தான். அந்த வேலைகாரன் எதையும் சரியாகப் புரிந்து கொண்டு வேலை செய்வதில்லை. அதனால் அந்தப் பெரிய மனிதன் என்ன செய்தார் என்றால்,ஒரு அட்டையில் முட்டாள் என்று எழுதி அந்த அட்டையை அவனது கழுத்தில் மாட்டிவிட்டார். அவனும் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை அப்படியே வைத்துக் கொண்டான்.

ஒரு நாள் அந்தப் பெரிய மனிதன் வயதாகி சாகக் கிடந்தார். இந்த வேலைக்காரன் அவரிடம் போய்நின்றான். "இதோ பார் ...இனியாவது நீ புத்திசாலியாக இரு. நான் போய் வருகிறேன்'' என்றார். எங்கே போகிறீர்கள்? என்றான் இவன்திரும்பிவர முடியாத இடத்திற்குப் போகிறேன் என்றார். அந்த இடம் எங்கே இருக்கிறது என்றான். எனக்குத் தெரியாது என்றார். "அதற்கு எந்த வழியாகப் போகப் போகிறீர்கள்?'' என்றான். "அதுவும் எனக்குத் தெரியாது'' என்றார். "அது எவ்வளவு தூரத்தில் இருக்கிறது?'' என்று கேட்டான். அதுவும் எனக்குத் தெரியாது என்றார். "காரை எடுத்துக் கொண்டு போகலாமா?'' என்று கேட்டான் "முடியாது என்றார். "வாகனத்தில் போகலாமா?'' என்றான்.முடியாது என்றார். ஆனால் போவது மட்டும் நிச்சயமா? என்றான். "ஆம்'' என்றார்.

இப்போது அந்த வேலைக்காரன் சொன்னான் "ஐயா எங்கே போவது என்றும் தெரியவில்லை. வழியும் தெரியவில்லை. எவ்வளவு தூரம் என்றும் தெரியவில்லை. காரில் போவதா என்றும் தெரியவில்லை. ஆனால் போகப்போவது மட்டும் நிச்சயம் என்கிறீர்கள். அதனால் இது என்னை விட உங்களுக்குத்தான் பொருத்தம் என்று கூறி தன் கழுத்திலிருந்த 'முட்டாள்' என்ற அட்டையை எடுத்து தன் முதலாளியின் கழுத்தில் மாட்டிவிட்டான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ள இலங்கை விமானப் படையின் உலங்குவானூர்தி விவகாரம்

(கொழும்பு)

இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான உலங்குவானூர்திகளை செகொஸ்லோ வாக்கியாவிலிருந்து இலங்கைக்கு க் கொண்டு வருவதற்கு போதிய அனுபவமற்ற அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளதாக சர்ச் சைக்கள் எழுந்துள்ளன.

செகொஸ்லோவாக்கியாவில் திருத்த வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ள எம்.ஐ24 ரக தாக்குதல் உலங்குவானூர்திகள் இரண்டை பரீட்சித்துப் பார்த்துவிட்டு மீண்டும் இலங்கைக்குக் கொண்டு வருவதற்காக அவை தொடர்பிலான போதிய அனுபவமற்ற வேறொரு பிரிவில் பணியாற்றும் ஒருவரை மொழி பெயர்ப்பாளராகவிமானப்படையினர் நியமித்துள்ளனர்.

தற்போது இடமாற்றம் செய்யப்பட்டுள்ள விமானப் படையின் விமானங்கள் சம்பந்தமான பிரிவின் முக்கிய அதிகாரி ஒருவரின் உறவினரான இந்த அரிகாரி அத்தகைய விமானப் படை உலங்கு வானூர் திகள் பற்றி எவ்வித அனுபவமுமற்றவராவார்.

உலங்கு வானூர்திகளைப் பற்றியும் தாக்குதல் விமானங்கள் பற்றியும் ரஷ்ய மொழி தொடர்பிலும் போதிய அறிவினைக் கொண்டிருக்கும் எத்தனையோ பேர் விமானப்படையின் விமானங்களுக்குப் பொறுப்பான பிரிவில் பணியாற்றுகின்ற போதிலும் இது பற்றிய போதியளவு அறிவினைக் கொண்டிராத வேறு பிரிவினைச்சேர்ந்த ஒருவர் நியமனம்செய்யப்பட்டுள்ள தால் விமானப் படையின் ஏனைய அதிகாரிகள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

தற்போது இடமாற்றத்திற்குள்ளாகியிருக்கும் விமானப் பிரிவின் பொறுப்பாளர் அந்தப் பிரிவில் பணியாற்றுகையில் அவரின் உறவினரான இந்த அதிகாரியை செகொஸ்லோ வாக்கிய பயணத்திற்கு பரிந்துரைத்துள்ளார்.

சர்ச்சைக்குரிய அந்த அதிகாரி விமானப்படையில் இணைந்து இன்னும் ஒருவருடம் கூட பூர்த்தியாகவில்லை.ரஷ்யாவின் மீல்ட் சயின் பணியகத்தின் அனு மதியைக் கூடப் பெறாமல் செகொஸ்லோ வாக்கியாவிலுள்ள லோம்ஜ்ரா எனும் நிறுவனத்திடம் திருத்தப் பணிகளுக்காக இந்த விமானங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் திருத்தப்பணிகள் முடிவடைந்துள்ள இந்த விமானங்களின் நிலையைப் பரீட்சித்துப் பார்த்து மீண்டும் கொண்டு வருவதற்காக விமானிகள் உட்பட செக்கொஸ்லோ வாக்கியாவிற்குச் செல் லும் மூவரடங்கிய குழுவிற்கு மொழிபெயர்ப்பாளரை அனுப்புவது குறித்து அதிகாரிகள் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று விமானங் களுக்குப் பொறுப்பாக விருக்கும் பிரிவின் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (கு)

# பொலிஸாரின் இடமாற்றங்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சி கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

தேசிய பொலிஸ் ஆணைக்குழு செயலிழந்த பின்னர் மேற்கொள்ளப்பட்டிருக்கும் இடமாற்றங்களுக்கு சட்டரீதியான அங்கீகாரம் இல்லை என்று ஐக்கிய தேசி யக் கட்சியின் முன் னாள் உள் நாட்டு விவகார அமைச்சரான ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது,

பொலிஸ் ஆணைக்குழு செயற்பாடற்று இருந்தாலும் அதனை மீண்டும் செயற்படுத்தும் வரை எந்த வகையிலும் பொலிஸ்துறையில் கீழ் நிலையில் உள்ளவர்களுக்கு இடமாற்றங்களை வழங்க முடியாது.

இந்த நிலையில் அரசியல்வாதிகளின் தேவைகளுக்காக ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஒழுங்கீனமாக மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த இடமாற்றங்களை நிறுத்துமாறு ஜனாதிபதியிடமும் பொலிஸ் மா அதிபரிடமும் ஐக்கிய தேசியக் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இருப்பினும் அது பற்றிக் கவனம் செலுத்தப்படாமையினால் அப்பாவி பொலிஸார் பல்வேறு நெருக்கடி களுக்கு இலக்காகியுள்ளனர்.

கடந்த காலங்களில் தங்களின் கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றிய பொலிஸார் பிரதேச அரசியல்வாதிகளின் தேவைகளுக்காக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதால் பொலிஸ் திணைக்களம் குழப்பகரமான நிலைக்கு உள்ளாகியுள்ளது என்றார்.

இதனிடையே அரசியல் தேவைகளுக்காக மேற்கொள்ளப்படும் இடமாற்றங்களை உடனடியாக நிறுத் துமாறு பொலிஸ் அதிகாரிகள் அரசாங்கத்துக்கு வேண்டு கோள் விடுத்துள்ளனர். (து)

## பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பார்வையாளர் தங்குமண்டபம்

(மருதங்கேணி)

பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் யுனிசெவ் நிதியுதவியுடன் வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினால் நிர்மாணிக்கப்பட்ட பார்வையாளர் தங்குமண்டபத்தை யுனிசெவ் யாழ். மாவட்ட பொறுப்பதிகாரி யுடித் புறுனோ திறந்து வைத்தார்.

மாவட்ட அதிகாரி எஸ். கதிரவேற்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் லயன் என். தணிகாசலம் கலந்து கொண்டார். (து-35)

## பாவனைக்கு உதவாத உணவுகள் அழிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் பிரதிப் பொதுச் சுகாதார பரிசோதகர் தலைமையிலான சுகாதார பரிசோதகர் குழுவினால் தெருவோரங்களில் நடாத்தப்படும் உணவகங்களை திடீர் முற்றுகையிட்டு சுகாதார மற்ற முறையில் தயா ரிக்கப்பட்ட சமைத்த உணவுகள் மற்றும் காலாவதியான பிஸ்கட் வகைகள், குளுக்கோஸ் என்பவற்றை அழித் தனர்.

கடந்த 10 ஆம் திகதி நடத்தப்பட்ட இந்த திடீர் முற்றுகையின் போது சுகாதார மற்றமுறையில் சமைத்த உணவுகளையும் கலாவதியான பிஸ்கட் வகைகள், குளுக்கோஸ் என்பவற்றையும் விற்பனை செய்த கடை உரிமையாளர்களை சுகாதாரப் பரிசோதகர் குழுவினர் கடுமையாக எச்சரிக்கை செய்ததுடன்குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வரை கடை பூட்டப்பட்டிருக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தினர். (கு)



2005 ஆம் ஆண்டிற்கான அகில இலங்கைத் தமிழ்மொழித்தினப் போட்டியில் திறந்த போட்டி விவாத நிகழ்வில் யாழ். மத்திய கல்லூரி முதலாமிடத்தைச் சுவீகரித்துக் கொண்டது .வெற்றிபெற்ற போட்டியாளர்களான (அணித் தலைவன்)தெ. ஹர்சன், ப. வினுசியன்,க.விஜயராஜ் ஆகியோர் பாடசாலை அதிபர் எஸ். பத்மநாதன் விவாத கழகப் பொறுப்பாசிரியர் நாக . தமிழிந்திரன்,பிரதியதிபர் எஸ்.சுந்தரலிங்கம், தமிழ்மன்றப் பொறுப்பாசிரியை திருமதி எஸ்.பிறேம்குமார் ஆகியோருடன் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம்.

# "விழிப்போடு இல்லாவிடின் நாம் பூண்டோடு அழிவது உறுதி"

(யாழ்ப்பாணம்)

**இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவின் அச்சுறுத்தல் ஒருபுறம், பேசாலைக் கடலில் சிங்களப் படையின் தாக்குதலால் படகு வெடித்தமை உலகவங்கி அபிவிருத்தித் திட்டங்கள் வடகிழக்கில் இடை நிறுத்தம் போன்ற செய்திகளுடன் தான் ஜெனீவா மாநாடு நடைபெறவிருக்கிறது.**

மா.க.ஈழவேந்தன்

எதிர்வரும் 22, 23ஆம் திகதிகளில் ஜெனீவாவில் அமைதிப் பேச்சு நடைபெறவிருப்பதாக வெளிவந்துள்ள செய்தி எமக்கு ஓரளவு ஆறுதல் அளிக்கும் வேளையில் ''குடாநாட்டில் எந்தச் சூழலையும் எதிர்கொள்ளப் படையினர் தயார்'' என்று இராணுவத் தளபதி சரத்பொன்சேகா யாழ்ப்பாணம் வருகை தந்து இராணுவ முகாமோடு தொடர்பு கொண்டு இங்குள்ள பாதுகாப்பு நிலைமைகளை மதிப்பீடு செய்த நிலையில் அவர் விடுத்துள்ள அறிக்கை அரசினதும் அரசபடையினதும் மனதில் எத்தகைய வரவேற்கத்தக்க மாற்றமுமில்லை என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

'யாழ்ப்பாணத்தின் பாதுகாப்பை அதிகரிப்பதில் எமது பங்களிப்பை நாம் செய்திருக்கின்றோம்' என்று படைத்தளபதி மேலும் கூறியிருப்பதோடு 'யாழ்ப்பாணக் குடாநாட்டின் பாதுகாப்பைப் பொறுத்த வரையில் தாம் அலட்சியமாக இருக்கப் போவதில்லை' என்றும் கூறியுள்ளார்.

'யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படும் சுற்றிவளைப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கையானது பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கு உதவியாக உள்ளது. இத்தேடுதல் நடவடிக்கைகளால் பொதுமக்களுக்குச் சிறிய அளவிற்தான் தொல்லை உள்ளது' என அவர் தெரிவித்துள்ளார். இவ்வாறு அவர் தெரிவித்துள்ள கருத்துக்கள் அனைத்தும் எமக்கு விடுக்கப்பட்ட அறைகூவல் என்றே நாம் கருதுகிறோம்.

'பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு உயிர்போகிறது' என்ற பழமொழிக்கமைய 20 ஆண்டுகளுக்கு மேலாக எம் தமிழீழ மண்ணில் குறிப்பாக யாழ்ப்பாண மண்ணில் வலோத்காரமாகக் குடியேறியுள்ள சிங்கள இராணுவம், சுற்றிவளைப்பு என்ற பெயரிலும் தேடுதல் என்ற பெயரிலும் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரிலும் செய்து வருகின்ற கொடூரமான செயல்களை நாம் எளிதில் மறப்பதற்கில்லை.

புங்குடுதீவைச் சேர்ந்த தர்சினியை பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கி சாகடித்தனர்.

இதனைத் தமிழ் நாட்டிற்கு சென்ற அமைச்சர் திஸ்ஸ விதாரன அங்கு தர்சினி சிங்கள இராணுவத்திற்கு பாலியல் தொழிலாளி என்று தமிழ் நாட்டில் தேவையில்லாமல் உளறி தமிழ்நாட்டின் பெரும் எதிர்பை அமைச்சர் திஸ்ஸ விதாரண உருவாக்கி வந்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளைப் பொறுத்த வரையிலும் எம்மைப் பொறுத்த வரையிலும் தமிழீழ மண்ணில் குறிப்பாக யாழ்ப்பாண மண்ணில் குடியேறியுள்ள சிங்களப்படை எம் மண்ணை அபகரிக்கும் படை என்பதோடு நில்லாது எம் இனத்தை எம் மண்ணிலேயே பூண்டோடு அழிக்கும் சதி முயற்சியில் ஈடுபட்டுள்ளதையும் நாம் சர்வதேசத்துக்கு பல தடவை சுட்டிக்காட்டியுள்ளோம்.

## சரத்பொன்சேகாவுக்கு கூறவிரும்புவது

உலகின் கருத்தினை எம்பால் ஈர்கின்ற முறையில் எதிர்வரும் ஜெனீவா மாநாட்டில் விடுதலைப்புலிகள் கலந்து கொள்கிறார்கள். இங்குள்ள சிங்களப் படையும், உழவுப்படையும், ஒட்டுப்படைகளும் வெளியேற வேண்டும் என்பது தான் விடுதலைப் புலிகளின் கோரிக்கையாக அமையப் போகிறது. இதே வேளை, உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் 20 ஆண்டுகளுக்கும் மேலாக இம்மண் ணில் வேரூன்றி உள்ள சிங்களப் படை வெளியேற்றப்பட்டே ஆக வேண்டும். சிங் களப்படை தாமாக வெளியேற மறுப்பின் விடுதலைப் புலிகள் சிங்களப் படையை எந்தச் சூழலிலும் எதிர்கொள்ள ஆயத்தமாக இருக்கிறார்கள் என்பதை இராணு வத்தளபதி சரத்பொன்சேகா உணர்ந்திருப்பது நல்லது.

அவர் அதனை உணர மறுப்பின் அவரை விடுதலைப்புலிகள் உணர வைப்பது உறுதி.

## பேசாலையில் படகு மூழ்கடிக்கப்பட்டதற்கு இராணுவத்தின் விளக்கம்

'ஜெனீவா பேச்சுக்கு சகலருமே ஆதரவு, கடல் சம்பவம் அதைப் பாதிக்க மாட்டாது' என்று பேசாலைக் கடலில் படகு வெடித்துச் சிதறி எரிந்தது பற்றி இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க கூறியுள்ள கருத்து எம் தமிழ் உயிர்களை மலிவுப் பொருளாக கருதுவதைக் குறிக்கிறது.

கடற்படையின் தாக்குதலினால் அதில் பயணம் செய்த நால்வர் மரணமடைந்த நிகழ்ச்சியை பெரிதுபடுத்த மறுத்து ஒரு சின்ன விடயமாக்கி திசை திருப்ப இராணுவம் எடுக்கும் முயற்சியை நாம் உற்றுக் கவனிக்கிறோம்.

இப்படகில் சென்றவர்கள் மீனவர்களாக இருக்கலாம். இந்நாட்டில் வாழ முடியாது பாதுகாப்புத்தேடி தமிழ்நாடு செல்ல முயன்ற ஏதுமற்ற ஏதிலிகளா கவும் இருக்கலாம். ஆனால் இராணுவம் படிசுமத்த முனையும் விடுதலைப்புலிகள் அல்ல இவர்கள்.

விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வமான அறிக்கை இதனை உறுதிப்படுத்துகிறது. எதுவாக இருந்தாலும் தமிழ் உயிர்களை மலிவுப் பொருளாகவே சிங்கள அரசும் சிங்களப் படையும் கருதுவதனால் தான் தமிழ் மண்ணில் தமிழ் உயிர்கள் பறிக்கப்படுவது மட்டுமல்ல கடலிலும் தமிழ் உயிர்கள் பறிக்கப்படுகிறது.

இதனைத் தமிழினம் தொடர்ந்து தாங்கிக் கொண்டு இருக்காது. பொறுமையின் எல்லைக்குத் தள்ளப்பட்டுள்ள தமிழினம் எத்தகைய செயலில் இனிமேல் ஈடுபடும் என்பதை காலம் தான் தீர்க்கும் இன்றைய சூழ்நிலையில் நாம் எதனையும் விரித்துக் கூற விரும்பவில்லை.

## உலக வங்கி அபிவிருத்தித் திட்டம் வடக்கு கிழக்கில் இடைநிறுத்தம்

இவ்வறிக்கையை ஆயத்தப்படுத்திக் கொண்டு இருக்கின்ற வேளையில் திருகோணமலையில் அபிவிருத்தி என்னும் பெயரில் அம்மண்ணை அபகரிக்கும் நோக்குடன் வடமத்திய மாகாண முதலமைச்சர் போட்டி பிரேமலால் திஸநாயக்கவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

இதனை எதிர்த்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் புறக்கணித்துள்ளனர். அதேவேளையில் திருமலையை விழுங்கி ஏப்பமிடும் நோக்குடன் செயற்படும் ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயந்த விஜயசேகர கலந்துள்ளார் என்றும் செய்தி வெளிவந்துள்ளது.

உலக வங்கி அபிவிருத்தித் திட்டங்கள் வடக்கு கிழக்கில் இடைநிறுத்தம் என்ற அதிர்ச்சி தரும் செய்தி தமிழ் ஊடகங்களில் தலைப்புச் செய்தியாக வெளிவந்துள்ளது. இச் செய்தியில் உலக வங்கியின் 160 பில்லியன் ரூபாய் பெறுமதியான நியாப் அபிவிருத்தித் திட்டங்கள் வடகிழக்கில் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்ற செய்தி புள்ளி விபரத்தோடு அமைந்துள்ளது. இதனால் யாழ்ப்பாணம் வழுக்கையாறுத் திட்டம், கிளிநொச்சி இரணைமடுத்திட்டம், மன்னார் கட்டுக்கரைக்குளம், திருகோணமலை அல்லஆற்றுத் திட்டம், மட்டக்களப்பு ரூகம் திட்டம், அம்பாறை கறவாகு ஆகிய திட்டங்கள் அனைத்தும் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகப் போவது உறுதி.

சுருங்கக் கூறின் சிங்கள அரசின் ஒவ்வொரு செயற்பாடும் தமிழினத்தின் பண்பாட்டுப் படுகொலைக்கும், தமிழினத்தின் உயிர்கொலைக்கும், தமிழினத்தின் பொருளாதாரத்தை முடக்கி எம்மை கழுத்தறுக்கும் கொடூர நிலைக்கும் தள்ளுகிறது என்று நாம் கூறின் அது வெறும் மிகைபடக்கூறல் என்றும் ஒதுக்க முடியாது.

இதை ஆங்கிலத்தில் (Cultural genocide, physical liquidation, & Economic strangulation) என்று கூறலாம்.

எனவேதான் என்றும் விழிப்போடு இருந் தால்தான் எம் இனத்தை நாம் காப்பாற்ற முடியும். என்பதை இங்கு மீண் டும் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம்.

# ஜப்பான் ஜெய்க்கா திட்டத்தின்கீழ் 10 பாடசாலைகள் அபிவிருத்தி

ஜப்பான் ஜெய்க்கா திட்டத்தின் கீழ் யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த 72 பாடசாலைகளிலிருந்து புள்ளி அடிப்படையில் 10 பாடசாலைகள் அபிவிருத்தி செய்வதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

சென்.சாள்ஸ் வித்தியாலயம், யா/இந்து ஆரம்ப கலவன் பாடசாலை, யா/பெண்கள் ஆரம்ப பாடசாலை, கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம், கொட்டடி நமசிவாயம் வித்தியாலயம், அச்சுவேலி மத்திய கல்லூரி, நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, சென்.ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை, பாஷையூர் சென் அன்ரனீஸ் வித்தியாலயம், கோண்டாவில் இராமகிருஷ்ணா மகாவித்தியாலயம் ஆகிய 10 பாடசாலைகளே தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளாகும்.

ஜெய்க்கா திட்டக்குழு யாழ்.கல்வி வலயத்திலுள்ள 72 பாடசாலைகளுக்கு நேரடியாக விஜயம் செய்து 15 அம்சங்களின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கி முன்னணியிலுள்ள 10 பாடசாலைகளைத் தெரிவு செய்துள்ளது.

முதற்கட்டமாக இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஜெய்க்கா திட்டத்தின் கீழ், அகில இலங்கை ரீதியில் யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை இரண்டாம் இடத்தைப் பெற்றிருந்தது. இரண்டாம் கட்டமாக யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த 10 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இரண்டாம் கட்டமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள இப் பத்துப் பாடசலைகளுக்கும் இச் செயறிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 3 வருடங்களுக்கு 4 இலட்சம் ரூபா வழங்கப்படவுள்ளது. முதலாம் வருடம் 2 இலட்சம் ரூபாவும் 2ஆம் 3ஆம் வருடங்களுக்கு தலா 1 இலட்சம் ரூபா வீதமும் நிதி உதவி வழங்கப்படும்.

2 ஆம் கட்டமாக, இந்த ஆண்டு இலங்கையில் 3 கல்வி வலயங்களிலிருந்து 30 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. திருகோணமலை கல்வி வலயத்திலிருந்து 10 பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இந்த வகையில் வடக்கு கிழக்கில் 20 பாடசாலைகளும் தென்னிலங்கையில் 10 பாடசாலைகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. (து)

# யுனிசெப் விடுதலைப்புலிகளுடன் இணைந்து செயற்படுமாம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச சிறார்நல அமைப்பான யுனிசெப்பும் தமிழீழ விடுதலைப்புலிகளும் தொடர்ந்து இணைந்து செயற்படுவதற்கு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு- கிழக்கில் சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் விடயத்தில் இரு தரப்பினரும் ஆற்றிவரும் பங்களிப்பை பலரும் பாராட்டியுள்ளனர்.

யுனிசெப் பிரதிநிதிகளுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் பிரதிநிதிகளுக்குமிடையில் கிளிநொச்சியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற சந்திப்பின்போது இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு- கிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் அத்தியாவசிய தேவைகள் குறித்து கவனம் செலுத்துவது தொடர்பாகவும் அவர்களது நலன்களைப் பேணுவது தொடர்பாவும் இந்தச் சந்திப்பின் போது இரு தரப்பினர்களும் விரிவாக ஆராய்ந்தார்கள் என தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதான செயலக இணையத்தளம் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வயது குறைந்த சிறுவர்கள், இயக்கத்தில் இணைவதை தடுக்கும் விடயத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் கையாளும் நடைமுறைகள் வரவேற்கத்தக்கது என்றும், வயது குறைந்த சிறுவர்கள் புலிகளில் இணையும் நடவடிக்கைகள் வெகுவாக குறைந்துள்ளமை திருப்தியளிக்கின்றது என்றும் யுனிசெப் பிரதிநிதிகள் குறிப்பிட்டுள்ளார்கள்.

இந்தச் சந்திப்பில் விடுதலைப்புலிகளின் சார்பில் சமாதான செயலக செயலாளர் நாயகம் புலித்தேவன் தலைமையிலான குழுவினரும், யுனிசெப் அமைப்பின் சார்பில் கிளிநொச்சி வலய அலுவலக தலைவி தலைமையிலான குழுவினரும் கலந்து கொண்டதாக விடுதலைப்புலிகளின் சமாதான செயலக இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது. (க-9)

# சட்டவிரோத மணல் அகழ்வு

வடமராட்சி கிழக்கு, மணற்காடு, குடத்தனை பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதுவரை காலமும் வடமராட்சி புனர்வாழ்வுக்கழகம் மண்ணை வழங்கி வந்தது. ஆனால் கடந்த சில மாதங்களாக மணல் விநியோகம் நிறுத்தப்பட்டதால் மணலுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது.

இந்த நிலைமையை தமக்குச் சாதகமாக்கிக்கொண்டு உழவு இயந்திரம் உள்ளவர்களும், கன்டர் உரிமையாளர்களும் மணற்காடு குடத்தனை பகுதிகளில் சட்டவிரோதமாக மணல் அகழ்ந்து 3 ஆயிரத்துக்கும் 4 ஆயிரத்துக்கும் இடைப்பட்ட விலையில் மணலை விற்றுக் கொள்ளை லாபம் அடைந்துவருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (நு-35)

## அருள் ஒளி வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தினால் வெளியிடப்படும் மாதாந்த மலரில் தை மாத இதழான அருள் ஒளி வெளிவந்துள்ளது. (க-9)

## மணலில் விளையாடிய சிறுவன் குண்டு வெடித்து படுகாயம்

வீட்டு வளவிற்குள் பறிக்கப்பட்டிருந்த மணல் கும்பி மேல் ஏறி விளையாடிக்கொண்டிருந்த சிறுவன், மணலுக்குள் இருந்த குண்டு வெடித்ததினால் படுகாயமடைந்துள்ளான்.

நேற்று முன்தினம் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் கொள்ளவிளான் வவுனிக்குளத்தைச் சேர்ந்த நான்கு வயது நவசுந்தரம் எழிராஜ் என்ற சிறுவனே படுகாயமடைந்துள்ளான்.

இச்சிறுவனின் இரு கைகளும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. ஒரு கையில் மூன்று விரல்களும் இழந்துள்ள அதேவேளை முழங்கால், வயிற்றுப் பகுதிகளிலும் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

இச்சிறுவன் தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றான். (க)

# தரம் - 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

இல: 06

ஆக்கம்: மூ.விக்னேஸ்வரன் (அதிபர்)
யா/உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை

வினாத்தாள் - II நேரம்: 1 மணி 15 நிமிடம்

கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து 1 - 15 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.

தோப்பூரில் சண்முகம் என்னும் நிலச் சுவாந்தர் வாழ்ந்து வந்தார். அவர் பிரமச்சாரி அத்துடன் உலோபி அவரது காணியில் பனை, தென்னை வேம்பு, பலா, மா, இலுப்பை போன்ற பலவகை மரங்கள் நின்றன. கிளிகளும், காகங்களும் அங்கே வாழ்ந்தன. வெளவால், புலுனி, ஆந்தை முதலிய பிராணிகள் இங்கே வந்து செல்லும். அவருக்கு உறவினர் என்றாலே வெறுப்பு. ஆனால் இவர் நோய்வாய்ப்பட்ட போது மருமகள் தங்கராணியே பராமரித்தார்.

01. உலோபி என்று யாரை அழைப்பர்?

........................................................................

02. இவரது காணியிலுள்ள எண்ணெய் தரும் மரங்கள் எவை?

........................................................................

03. வெளவாலை வாவென்றழைக்கும் மரங்கள் எவை?

........................................................................

04. பனை என்பதன் ஒத்த சொல்?

........................................................................

05. பிரமச்சாரி என்று யாரை அழைப்பர்?

........................................................................

06. காகம் கரையும் என்பது போல கிளி?

........................................................................

07. வெறுப்பு என்பதன் எதிர்ச்சொல்?

........................................................................

08. பந்தியில் வருகின்ற இணைமொழி ஒன்று?

........................................................................

09. முக்கனிகளில் ஒன்று மாம்பழம் மற்றது பலாப்பழம் மூன்றாவது கனி என்ன?

........................................................................

10. தங்கராணி சண்முகத்துக்கு எப்படி மருமகளாயிருப்பாள்?

........................................................................

சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் அடைப்புக்குள் எழுதுக.

11. கிளி தென்னையில் கூடு கட்டி வாழ்ந்தது ( )

12. வேப்பமரத்திலும் கள் எடுக்கலாம் ( )

13. புலுனி, வெளவால், ஆந்தையுடன் இரைதேடும் ( )

14. நிலச்சுவாந்தரிடம் கூடுதலான காணிகள் இருக்கும் ( )

15. பலாவின் உள்ளீடு சதை ( )

கீழே தரப்பட்டுள்ள பாடலை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

*சந்தைக்குப் போறோம்*
*பழ வகை இலைவகை*
*காய்கறி மாமிசம்*
*வாங்கிடப் போறோம்*

16. பச்சையாகவும் உண்ணும் இலைவகை ஒன்று ........................

17. கறி சமைக்கும் பழ வகை ஒன்று ........................

மாமிச உணவுகள் இரண்டு 18........................

19........................

யாழ்ப்பாணத்திலுள்ள் பிரபல்யமான சந்தைகள்
20........................

21........................

22. வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யும் பழம் ........................

23. பந்தலில் காய்க்கும் மரக்கறி ஒன்று ........................

புதிர்களை விடுவிக்குக.

24. இலை தின்னலாம், பூ தின்னலாம், காய் தின்னலாம், பழம் தின்ன முடியாது அது என்ன?

........................................................................

25. பூவும், காயும் சமைக்கலாம் இலையில் உண்ணலாம், பழம் தின்னலாம் அது என்ன?

........................................................................

காந்தனின் தோட்டத்திலுள்ள மாமரக் கிளையில் 3 மணிப்புறாக்களும், 5 அணில்களும், 4 மாம்பழக் குருவிகளும் இருந்தன. சிறிது நேரத்தில் 3 அணில்கள் அதே மரத்திலுள்ள மற்றொரு கிளைக்குத் தாவிச் செல்ல 2 மாம்பழக் குருவிகளும் ஒரு மணிப்புறாவும் பறந்து சென்றன. அம்மரப் பொந்திலுள்ள இரண்டு பூச்சிகள் வெளியே தலையை நீட்டிக்கொண்டிருந்து பின் உள்ளே சென்றன. இப்போது பறந்து சென்ற மணிப்புறாவோடு இன்னும் இரண்டு ஆண் புறாக்களும் மரத்தை வந்தடைந்துள்ளன.

விவரணத்தை வாசித்தபின் 26 - 30 வரையான வினாக்களுக்கு விடை தருக.

26. தற்போது அம்மரத்திலுள்ள மணிப்புறாக்களின் எண்ணிக்கை?

........................................

27. அம்மரத்தில் தற்போது எத்தனை அணில்கள் உள்ளன?

........................................

28. மரத்திலுள்ள மொத்த உயிரினங்களின் எண்ணிக்கை?

........................................

29. மரத்தில் தற்போதுள்ள கிளிகளின் எண்ணிக்கை?

........................................

30. தற்போது மரத்திலுள்ள மாம்பழக் குருவிகளின் எண்ணிக்கை?

........................................

தரப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டு 31 - 35 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.

நான்கு ரொபியின் விலைக்கு ஒரு கன்டோஸ் வாங்கலாம். நான்கு கன்டோஸ்களின் விலைக்கு ஒரு லெமன்பப் வாங்கலாம். நான்கு லெமன்பப்கள் வாங்கும் விலைக்கு ஒரு மோல்டா வாங்கலாம் ஒரு மோல்டாவின் விலை 192.00

31. இரண்டு ரொபிகளின் விலை என்ன? ........................

32. ஒரு கன்டோஸின் விலை என்ன? ........................

33. மூன்று லெமன்பப்பின் விலை என்ன? ........................


34. ஒரு கன்டோஸினதும் ஒரு ரொபியினதும் விலை என்ன?

........................

35. மேற்கூறப்பட்டவற்றின் மொத்த விலை என்ன?

........................

36 - 40 வரையான வினாக்களுக்கு A படிவத்திலுள்ள எண்ணுடன் B படிவத்திலுள்ள எண்ணை ஒழுங்கின்படி எழுதிக் கழித்து C படிவத்தில் விடையை எழுதுக.




தனுவின் கடைக்குக் கொண்டுவரப்பட்டு பின் விற்பன்ன செய்யப்பட்ட சவர்க்காரக்கட்டிகள் பற்றிய தகவல்கள் கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| சவர்க்கார வகைகள் | கொண்டு வரப்பட்டவை | விற்பனை செய்யப்பட்டவை |
|---|---|---|
| வொன்டலைட் | 784 | 339 |
| சன்லைட் | 903 | 392 |
| செலினோல் | 611 | 299 |
| கோம்பா | 336 | 167 |

41. கொண்டுவரப்பட்ட சவர்க்காரக் கட்டிகளின் எண்ணிக்கை?

........................................

42. விற்பனை செய்யப்பட்ட சவர்க்காரக் கட்டிகளின் எண்ணிக்கை?

........................................

43.ஒரு சவர்க்காரக்கட்டியை விற்பனை செய்வதனால் 50 சதம் இலாபம் கிடைக்கும் எனின் விற்பனை செய்யப்பட்ட சன்லைட், கோம்பா சவர்க்காரக் கட்டிகளில் கிடைக்கும் இலாபம் என்ன?

........................................

44. முழுச் சவர்க்காரங்களையும் விற்றால் எவ்வளவு இலாபம் கிடைக்கும்?

........................................

45. ஒரு செலினோல் சவர்க்காரத்தின் நிறை 85g எனில் விற்பனை செய்யப்பட்ட சவர்க்காரங்களின் நிறையை kg - g இல் தருக?

........................................

(07ஆம் பக்கம் பார்க்க)

# லெபனான் ராஜதந்திரக் குழு இன்று இலங்கை வருகை!

(கொழும்பு)

லெபனானில் தொழில் புரிந்துவரும் இலங்கையர்களின் பிரச்சினைகள் தொடர்பாக லெபனான் ராஜ தந்திரக்குழுவுடன் இலங்கை அரசாங்கம் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளது.

இன்று இலங்கை வரவுள்ள லெபனான் ராஜ தந்திரக் குழுவுடன் அரசாங்கம் இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளது என்று வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

லெபனானின் பொதுப் பாதுகாப்பு அமைச்சின் தலைமை அதிகாரி ஜெனரல் சிகாம் ஹாராத் தலைமையில் நான்கு பேர் கொண்ட குழு இலங்கை வரவுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் ஜெகத் வெள்ளவத்த தெரிவித்தார்.

லெபனானில் தொழில் புரிந்துவரும் இலங்கையர்களின் சம்பளப் பிரச்சினை, பணிப்பெண்களாகக் கடமையாற்றி வரும் பெண்களின் பாதுகாப்புப் பிரச்சினை, தொழில் முகவர் நிலையங்கள் மற்றும் சிறை வைக்கப்பட்டுள்ள இலங்கையர்கள் ஆகிய விடயங்கள் குறித்து இந்தப் பேச்சுவார்த்தையின் போது கவனம் செலுத்தப்படவிருக்கிறது.

85 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கையர்கள் லெபனானில் தொழில் புரிந்து வருவதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. (க-7)

# வடமராட்சியில் தொடரும் சட்டவிரோத மணல் அகழ்வு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வல்லிபுர பிரதேசத்தில் சட்டவிரோத மணல் அகழ்வுச் சம்பவம் என்றுமில்லாத அளவிற்கு அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே இரவு வேளைகளில் மட்டும் இடம்பெற்று வந்த இச்சட்ட விரோத மணல் அகழ்வு தற்போது எந்தவிதமான கட்டுப்பாடுமின்றி துணிகரமாக பகல்வேளையிலும் இடம்பெறுகிறதாகக் கூறப்படுகின்றது.

ஒரு நாளுக்கு 10 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டால் எத்தனை தடவையும் மணலை அள்ளுவதற்கு அனுமதி வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை மணல் அகழ்வில் ஈடுபட்ட வாகனங்கள் அண்மையில் இனந்தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டதும், ஒரு வாகனம் வாகனச் சாரதியுடன் தீக்கிரையாக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-52)

# தொடரூந்து சேவைகள் பாதிப்பு

தொடரூந்து சேவைகள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் கடும் பாதிப்புக்குள்ளானது.

புதிய சம்பள நடைமுறையை உடனே அமுல்படுத்தக் கோரி நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் 6 தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபட்டன.

தொடரூந்து நிலைய மேலாளர்கள் சங்கத் தலைவர் பி.கே.வர்ணசூர்யா இது தொடர்பில் தெரிவிக்கையில், புதிய சம்பள நடைமுறையை ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தக் கோரி இந்த ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் நடத்தப்படுவதாகத் தெரிவித்தார்.

எமது கோரிக்கைகளை அரசாங்கம் நிராகரித்தால் முழு அளவிலான தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்றும் வர்ணசூர்யா எச்சரித்தார். (து)

# சிறந்த மாணவர்களை உருவாக்குவதில் பாடசாலைகளின் பங்கு

(சுன்னாகம்)

'பெற்றோர், மாணவர், ஆசிரியர் ஆகிய மூன்று பகுதியினரும் கவனத்துடன் செயலாற்றினால் பாடசாலையில் நல்ல முன்னேற்றத்தைக் காண முடியும். கற்றலுடன் மாத்திரம் நின்றுவிடாமல் ஏனைய சகல துறைகளிலும் மாணவர்களை ஈடுபடச்செய்வதன் மூலம் சிறந்த மாணவர்களை உருவாக்க முடியும்'.

இவ்வாறு கடந்த ஜனவரி மாதம் 19ஆம் திகதி வியாழக்கிழமை கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் நடைபெற்ற கால்கோள்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கந்தரோடை கிராம அலுவலர் லயன் திருநாவுக்கரசு கூறினார்.

பாடசாலை அதிபர் க.செல்வக்குமாரன் பாடசாலைக் கொடியை ஏற்றிவைக்க, பிரதம விருந்தினர் லயன் திருநாவுக்கரசு மங்கள விளக்கை ஏற்றினார் தரம் I மாணவர்களை தரம் II மாணவர்கள் வரவேற்றனர்.

வலிகாமம் வலய விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.விஜேந்திரசர்மா, உப அதிபர் சு.பிரணதார்த்திகரசர்மா, பகுதித் தலைவர் திருமதி ந.தற்பரானந்தன் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

முன்னாள் யாழ்.மேயர் எஸ்.எஸ்.நவரத்தினம் நினைவாக கற்றல் உபகரணங்களை அவர் குடும்பத்தினர் சார்பாக இ.சுத்தானந்தன் கையளித்தார். வங்கிகளில் மாணவர்களுக்குரிய வங்கிக் கணக்குகள் பிரதம விருந்தினராலும், இ.சுத்தானந்தனாலும் ஆரம்பித்து வைக்கப்பட்டன. (து)

## மூவருக்கு விளக்கமறியல்

(பருத்தித்துறை)

அனுமதிப்பத்திரமின்றி வல்லிபுரக் கோயில் பிரதேசத்தில் மண் ஏற்றினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் மூவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினமிரவு இவர்கள் சட்டவிரோதமாக மணல் ஏற்றிக்கொண்டிருந்த போது பொலிஸார் மூவரையும் கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

அவர்களை எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் அரியநாயகம் உத்தரவிட்டார்.

ஏ.யேசுராஜ் (தும்பளை), தங்கமணி தானேஸ்வரன் (தணிகை - துன்னாலை), ராஜதுரை ஞானபாஸ்கரன் (துன்னாலை) ஆகிய மூவருமே விளக்கமறியலில் வைக்கப்படுபவர்கள் ஆவர். (க)

## 5ம் தர புலமைப் பரீட்சை வினாத்தாள் - 06

மாணவர் முழுப்பெயர் : ........................................

பாடசாலையின் பெயர் : ........................................

வீட்டின் முகவரி : ........................................

மாணவர்களே! உங்கள் விடைகளை 21.02.2006 இற்கு முன் அனுப்பிவைக்கவும். உங்கள் விடைகளுடன் கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.

**வலம்புரி**
**கல்விப்பகுதி,**
**வினாத்தாள் இல - 06**
**இல.3, 2ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.**


குறிப்பு :- மாணவர்களின் நலன்கருதி இவ வினாத்தாள்களை வைத்துக்கொண்டு, வினாக்களுக்கான விடைகளை வேறு ஒரு தாளில் எழுதி கூப்பனுடன் சேர்த்து அனுப்பவும். வினா இலக்கங்களை சரியாகக் குறிப்பிடவும்.பாடசாலையின் பெயரினை முழுமையாக எழுதவும்.

(0ஆம் பக்கத் தொடர்ச்சி...)

**கீழே தரப்பட்ட உணவுப் பொருட்களின் சிங்களப் பெயர்களை எழுதுக?**

46. வடை ..............................
47. கடலை ..............................
48. தோசை ..............................
49. அப்பம் ..............................

**கீழே தரப்பட்டுள்ள வானவில்லின் வர்ணங்களை அவதானிக்கும் பரிசோதனையாகும். இங்கு ஆங்கில எழுத்துக்களால் குறிப்பிடப்பட்ட அம்சங்களையும் பொருட்களின் பெயரையும் எழுதுங்கள்.**




50.A .............................. 51.B ..............................

52.C .............................. 53.D ..............................

54.E ..............................

**கீழே தரப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து எழுதுக.**

நான் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சென்று வரும்போது முன்புறத் தெருவோரத்தில் சந்தித்த சாத்திரக்காரியைப் பற்றிக் கூறுகிறேன் கேளுங்கள் அவர்....

55. ........................................................................
56. ........................................................................
57. ........................................................................
58. ........................................................................
59. ........................................................................
60. ........................................................................

# தரம் - 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள் - 4

அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு:

01.தி.நிரோஜன் - யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம வித்தியாலயம்.
02.க.தர்மிளா - யா/ஆனைப்பந்தி மெதடிஸ் மிஷன் வித்தியாலயம்.
03.ஜெ.தானுஷா - யா/இந்து தமிழ்கலவன் பாடசாலை.
04.ச.தக்ஷாயினி - யா/புனித சென் பொஸ்கோ.
05.நி.பகிரதன் - யா/அ.மி.த.க பாடசாலை.

## வினாத்தாள் - 04 இன் விடைகள்

| | | |
|---|---|---|
| 01. நித்தியகல்யாணி, மல்லிகை செவ்வந்தி | 02. குறோட்டன் | 03. கல்யாணி, |
| | 04. செவ்வந்தி | 05. றோசாப்பூ |
| 06. மல்லிகை | 07. கலகல | 08. அழகுக்காக |
| 09. பேராதனை | 10. ரசிக்கலாம் | 11. 123 |
| 12. 10 | 13. பொருத்தமானது | 14. 35 |
| 15. ட | 16 - 20 பொருத்தமானது | |
| 21. களிமண் | 22. மணல்மண் | 23.வண்டல்மண் |
| 24. வண்ணத்துப்பூச்சி | 25. எறும்பு | 26. ஈ |
| 27. குளவி | 28. நுளம்பு | 29.கும்பிடுபூச்சி |
| 30. சரி | 31. பிழை | 32.சரி |
| 33.சரி | 34. சரி | 35. பிழை |
| 36 - 40 பொருத்தமானது | 41. யாழ்ப்பாணம் | 42.திருகோணமலை |
| 43. காலி | 44. கொழும்பு | 45.வணக்கம் |
| 46.பூ | 47.மாங்காய் | 48.சூரியன் |
| 49- 52 பொருத்தமானது | 53.நாகமரம் | 54.சூரிய ஒளி |
| 55 - 60. பொருத்தமான மை[illegible] | | |

# அன்பினால் அகிலத்தை ஆட்சி செய்ய அன்பு செய்வீர் ஜெகத்தீரே!

ஒரு துறவியும் அவருடைய சீடரும் தங்கள் தவச்சாலைநோக்கி நடந்துகொண்டிருந்தனர். ஒரு முரடன், அவர்கள் இருவரையும் வழிமறித்தான்.

"போலித் துறவிகள் இருவரும் எங்கே போகிறீர்கள்?" என்று ஏளனம் பொங்கக் கேட்டான். துறவி பதிலேதும் சொல்லாமல் புன்முறுவல் பூத்தார்.

சீடர் சிரமப்பட்டுத் தன்னுள் வெடித்துக் கிளம்பிய சினத்தை அடக்கிக்கொண்டார். வம்புக்கு வந்த வழிப்போக்கன், அவர்களை எளிதில் விடுவதாக இல்லை.

"ஊரை ஏமாற்ற இந்தக் காவியுடை மிகவும் வசதியாக இருக்கிறது என்று எல்லோரும் சொல்வது உண்மைதானா?" என்றான்.

துறவியின் முகத்தை அலங்கரித்த புன்முறுவல் மாறவில்லை. ஆனால் சீடருக்கோ மனம் தாளவில்லை. வசை பாடிய வழிப்போக்கன் கன்னத்தில் ஓங்கி அறைந்தார்.

அக்கணமே துறவி, சீடரைவிட்டு விலகி விரைவாக நடந்தார். துறவியின் வேகத்துக்குக் காரணம் விளங்காத சீடர், ஓடிச்சென்று அவர் பாதம் பணிந்து, "ஐயனே! என்னை விட்டு விலகிச் செல்ல நான் இழைத்த குற்றம் என்ன?" என்று விம்மியபடி கேட்டார்.

## சினமென்னும் சேர்ந்தாரைக்கொல்லி

"மகனே! நீ சினத்தின் பிடியில் சிக்காதவரை உன்னுள் வானத்துத் தேவதைகள் வாசம் செய்தனர். அதனால் தான் நான் உன்னுடன் நெருங்கியிருந்தேன். நீ கோபமுற்று வன்மையான வார்த்தைகளால் வசைபாடி, உன் உடல் வலிமையைக் காட்டிய கணத்தில், உன் ஆன்மாவை அசுரர்கள் ஆக்கிரமித்துக் கொண்டுவிட்டார்கள். எனவேதான் உன்னிடமிருந்து நான் விலக நேர்ந்தது." என்று விளக்கிய துறவி, அவர் வழியில் தனியே நடந்தார்.

"கர்வம் உள்ளவன் கடவுளை இழக்கிறான். பொறாமைக்காரன் நண்பனை இழக்கிறான். கோபக்காரன் தன்னையே இழக்கிறான்" என்பது மண்ணின் முதுமொழி.

## நரகத்தின் வாயில்கள்

காமம், கோபம், பேராசை மூன்றும் நரகத்தின் முக்கிய வாயில்கள் இவை தாம் நம் ஆன்மாவைக் களங்கப்படுத்தும் மோசமான எதிரிகள் என்கிறது விதுர நீதி.

"பாவ நோக்குடன் ஒருவன் எதைப் பேசினாலும், செய்தாலும், வண்டியில் பூட்டிய எருது பாரம் சுமப்பது போல, வலியைச் சுமக்க நேரும். தூய நோக்குடன் எதைச் சொன்னாலும் செய்தாலும், சூரிய வெளிச்சத்தைத் தொடரும் நிழல் போல மகிழ்ச்சி தொடரும்" என்கிறார் புத்தர்.

கோபம் எப்போதும் பகைமைக்குப் பால் வார்க்கும். கோபம் மனிதன் தனக்குத் தானே வழங்கிக் கொள்ளும் சாபம். கோபத்தின் ஏணியில் ஏறி எவனும் ஆன்ம கோபுரத்தை அடைந்துவிட முடியாது.

"பகையைக் கொண்டு பகையை முடிவுக்குக் கொண்டு வர முடியாது. அன்பைக் கொண்டுதான் பகையை முடிவுக்குக் கொண்டு வர முடியும்" என்றார் புத்தர். அவருடைய வாழ்வில் ஒரு செய்தி நம் சிந்தனையைச் செதுக்கக் கூடியது. சினத்தைப் போக்க வல்லது

> "பையார் வெம் பணத்துலகில் பகையாலே பகை மறைத்து
> நெய்யாலே நெருப்பவிக்க நீள் நிலத்தில் கண்டதில்லை"

## கருணைக் கடல்

பூரண அமைதியும் பெருங்கருணையும் விழிகளில் வழிய புத்தபிரான் வீற்றிருந்தார். பூர்மா என்ற துறவி அங்கு வந்தார். ஸ்ரோகணி பரந்தர்கள் வாழும் பகுதியில் பௌத்த தர்மத்தைப் போதிக்க விடை பெறுவதாகக் கூறினார்.

"நீ தர்மத்தைப் போதிக்கும் போது அந்தப் பகுதி மக்கள் உன்னை நிந்தனை செய்து வசைமாரி பொழிந்தால் என்ன செய்வாய்?" என்று கேட்டார் புத்தர்.

"இவர்கள் நல்லவர்கள். கை நீட்டிக் காயப்படுத்தாமல் வாயளவில் நிற்கிறார்களே என்று மகிழ்வேன்" என்றார் பூர்மா.

"வாய் திறந்து வசை பாடியவர்கள், கைநீட்டி அடிக்கவும் செய்யலாம். அப்போது உன் நிலை என்னவாக இருக்கும்" என்று கௌதமர் அடுத்த கேள்வியை எழுப்பினார். இவர்கள் எவ்வளவு நல்லவர்கள்! ஆயுதங்களால் தாக்காமல் கைகளால் அடிப்பதோடு நின்று விட்டார்களே என்று அகமகிழ்வேன்!" என்றார் அத்துறவி.

"சரி, ஆயுதங்களால் அவர்கள் தாக்கத் தொடங்கினால், நீ எப்படி எதிர்கொள்வாய்?" என்று பெருமான் கேட்டதும், "இவர்கள் மிக மிக நல்லவர்கள். பிறவித் துன்பத்திலிருந்து விடுபட, ஒவ்வொருவரும் எந்தெந்த வழிகளிலெல்லாம் முயலும் போது, எனக்கு இவர்கள் எளிதாக முத்திக்கு வழி செய்து விட்டார்களே என இதயம் மகிழ்ந்து இருகரம் கூப்பி வாழ்த்துவேன்!" என்றார் துறவி.

## புத்தஞானம் பெற்ற பூர்மா

"பூர்மா! உனக்கு புத்த ஞானம் கனிந்து விட்டது. போய் வா!" என்றார் புத்தர்.

கோபமும் பழிவாங்கும் எண்ணமும் அரக்கப் பண்புகள். மன்னிக்கும் மனோபாவம் தெய்வத்தின் சீதனம். விலங்கு அடிக்கும்; தெய்வம் அணைக்கும். மனி



தன் நினைத்த கணமே விலங்காக மாற முடியும் காரணம் அவனுக்கும் விலங்குக்கும் உள்ள இடைவெளி நூலிழையே!

## சாகாத சரித்திரப் புகழ்பெற்ற தெய்வங்கள்

மனிதன் தெய்வமாகப் பரிணமிக்க மனம் பண்பட வேண்டும். அதற்கு இடையறாத முயற்சியும் பயிற்சியும் அவசியம். மன்னிக்கும் மனோபாவம் இருந்ததனாலேயே புத்தரும், யேசுவும், நபிகளும் புனிதர்களாகப் போற்றப்படுகிறார்கள். இந்த வரிசையில் காந்தியடிகளும் போற்றப்படுவதற்குக் காணரம் இதுவே!

யேசுநாதர் தன் சீடர்களுடன் கடைசி விருந்தை ஏற்கும்போது அவர்களின் கால்களைக் கழுவி தனது ஆடையினால் துடைத்தார். தன் சீடர்களில் ஒருவரான யூதாஸ் தன்னைக் காட்டிக்கொடுப்பான் என்று உணர்ந்த நிலையிலும் 'உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன்' என்று மொழிந்தவர், வெறுப்பை வெளிப்படுத்தாமல் யூதாசின் பாதங்களையும் தன் பரிசுத்தமான கரங்களால் கழுவித் துடைத்தார்.

## யேசு காட்டிய பாதை

அவருடைய தலையிலே முள்முடியை வைத்து, அவர் மீது காறி உமிழ்ந்து, உடுத்தியிருந்த மேலங்கியை விலக்கி கோலினால் சிரசில் அடித்து, கசப்புக் கலந்த காடியைக் குடிக்கக் கொடுத்து, இரண்டு கள்வர்கள் அறையப்பட்ட சிலுவைகளுக்கு நடுவில் அவரைச் சிலுவையில் அறைந்து, "நீ தேவனுடைய குமாரன் என்பது உண்மையானால் சிலுவையிலிருந்து இறங்கி வா" என்று ஏளனம் செய்தவர்கள் மீதும் கர்த்தர் கோபம் கொள்ளவில்லை.

"பிதாவே! தாங்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கும் இவர்களை மன்னியுங்கள்" என்று மனமுருகி வேண்டினார் அந்தத் தேவமைந்தர்.

## அளவற்ற அருளாளர்

தன்னை வாழவிடாமல் விரட்டியடித்த மெக்கா நகருக்குள் எட்டு ஆண்டுகளுக்குப் பின்பு பத்தாயிரம் முஸ்லிம் படைவீரர்கள் சூழ நபிகள் நாயகம் வந்தார். அவருக்கு எழுத்தில் வடிக்க முடியாத எண்ணற்ற இன்னல்கள் இழைத்த மெக்காவின் மக்கள், தங்களுக்கு என்ன நேருமோ என்று நடுங்கியபடி நின்றனர்.

மெக்காவில் பெருமானார் இருந்த போது அவர் செல்லும் வழியில் கல்லும் முள்ளும் பரப்பியவர்கள், அவர் தலையில் செத்த ஒட்டகத்தின் குடலையும் குப்பையையும் வீசியவர்கள், அவருடைய உற்றார், உறவினர்களைக் கொலை வாளால் கொன்று குவித்தவர்கள், அவரையே கொல்ல முயன்றவர்கள். கூடியிருந்த கூட்டத்தில், இறைவன் நமக்கு வெற்றியை வழங்கியிருக்கும் இந்த வேளையில் விரோதங்களிலிருந்து விடுபடுங்கள்; மெக்கா வாசிகள் அளித்த துன்பங்களையும் துயரங்களையும் மன்னித்து மறந்து விடுங்கள். அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்குகிறேன்" என்றார் நபிகளார்.

## மன்னிப்பு உருவாக்கும் மனிதம்

அண்ணவாரின் திருமகள் ஜைனப், மெக்காவலிருந்து மதீனா செல்ல ஒட்டகத்தில் ஏறிய போது அவரைக் ஹப்பார் என்பவன் ஈட்டியால் தாக்கினான். அதனால் அவருக்குக் கருச்சிதைவு ஏற்பட்டு, மதீனா சென்றடைந்த சில நாட்களில் ஜைனப் மரணமடைந்தார்.

மெக்காவில் அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கப்பட்ட செய்தி அறிந்து அயலகத்தில் மறைந்திருந்த ஹப்பார் தாய் மண்ணுக்குத் திரும்பி நபிகளின் மன்னிப்பை வேண்டினான். தன் அன்புக்குரிய மகளின் மரணத்துக்குக் காரணமானவன் அவன் என்று தெரிந்தும் "ஹப்பார்! ஆண்டவன் உன்னை மன்னிப்பார்!" என்றார் அந்த அருளாளர்.

## சிந்தனைச் சிற்பி

'உலகத்தின் முதல் சிந்தனையாளர்' என்ற சிறப்புக்குரிய சாக்ரடீஸ், யேசுவுக்கு முன்பே தன்னுடைய இலட்சியத்துக்காக இன்னுயிரைப் பலி கொடுத்தவர். மூட நம்பிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முயன்ற முதல் புரட்சியாளர் அவர்.

ஓர் எளிய சிற்பிக்கும், ஏழை மருத்துவச்சிக்கும் மகனாகப் பிறந்த சாக்ரடீஸ், கிரேக்கத்தின் பெருமைக்குரிய சிந்தனையாளராக உயர்ந்தார். சாக்ரடீஸின் செல்வாக்கைக் கண்டுமனம் வெதும்பிய சிலர் சுமத்திய வீண்பழியின் விளைவாக அவர் விஷம் அருந்தி உயிர்துறக்க வேண்டும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

பழைமைவாதிகளும் மதவாதிகளும் ஆட்சியாளர்களும் சேர்ந்து நடாத்திய சதி நாடகம் அது. சிறையிலிருந்து சாக்ரடீஸை விடுவித்து வேறு நாட்டுக்கு அனுப்பி வைக்க அவருடைய நண்பர்களும் மாணவர்களும் முயன்றபோது அவர் அதற்கு இணங்கவில்லை.

"நாட்டின் சட்டத்துக்குத் தலை வணங்குவது தான் நல்ல குடிமகனின் நற்பண்பாகும். மரண தண்டனையை நான் மனம் விரும்பி ஏற்கிறேன். எவரிடத்தும் எனக்குக் கோபமில்லை. உயிர் போகும்வரை எத்தனை முறை வேண்டுமானாலும் விஷம் குடிக்க நான் தயாராக இருக்கிறேன்" என சாக்ரடீஸ் தன் மனைவி சாந்திப்பி, நண்பன் கிரிட்டோ ஆகியோரிடம் ஆறுதலாகப் பேசிக்கொண்டிருந்தபோது நச்சுக் கோப்பை வந்து சேர்ந்தது.

நச்சுக் கோப்பையைக் கொண்டு வந்தவனைக் கூட நீ நலமாக இருப்பாயாக என்று வாழ்த்திய பின்பே, சாக்ரடீஸ் ஹெம்லாக் என்ற அந்தக் கொடிய விஷத்தை முக மலர்ச்சியுடன் அருந்தி உயிர் துறந்தார்.

## சினத்தை அடக்கின் சிறப்பு வளரும்

தவறுவது மனித இயல்பு. மன்னிப்பது தெய்வப் பண்பு. கோபம் அரக்க மனதின் ஆயுதம். அதற்கு அழிக்கத் தான் தெரியும். சினம் வாழ்க்கையைச் சிக்கலாக்கும். உறவுகளைச் சிதைக்கும். அமைதியைக் குலைக்கும் ஆயுளைக் குறைக்கும்.



சினத்தின் வயப்படும் போது மனம் சமநிலை இழந்துவிடும். சமநிலை இழந்தவன் வாழ்க்கை எழ முடியாத பள்ளத்தில் சரிந்துவிடும். சினம் கொண்ட நெஞ்சில் சிந்தனைத் தெளிவு இருக்காது. 'தான்' என்ற அகந்தை உணர்வு எங்கு வேர்பிடித்து விருட்சமாக வளர்ந்து விடுகிறதோ அங்கே தான் கோபம் என்னும் விஷக் கனி காய்த்துக் குலுங்கும்.

கோப நெருப்பு, அடுத்தவனை விட, தன்னையே எரித்துச் சாம்பராக்கும். அதனால்தான் பாரதி 'கோபத்தால் நாடியிலே அதிர்ச்சி உண்டாம்; கொடுங்கோபம் பேரதிர்ச்சி' என்று பாடினான்.

கர்ணன் கவச குண்டலங்களுடன் பிறந்தது போல் நாம் கோபத்துடன் பிறந்திருக்கிறோம். 'கோபம் உள்ள இடத்தில் குணமிருக்கும்' என்று யாரோ சொன்னதைச் சொல்லிச் சொல்லியே நம்முடைய கோபத்தை நாம் நியாயப்படுத்துகிறோம்.

## முதல் முட்டுக்கட்டை

குணம் உள்ளவனாக இருப்பதற்குக் கோபம் தான் முதல் முட்டுக்கட்டை. உள்ளுக்குள் அடக்கி வைத்திருக்கும் ஊமைக் கோபத்துக்கு ஒரு வடிகால் தேவைப்படும் போது, யாராவது ஒருவர் அதற்குப் பலியாக நேருகிறது.

**தமிழருவி மணியன்**

"ரௌத்ரம் பழகு' என்று பாரதி சொன்னதை நாம் தவறாகப் புரிந்துகொண்டோம். சமூகத் தீமைகளிடம் நாம் சமரசம் செய்து கொண்டு பலவீனர்களிடம் நம் கோபத்தைக் காட்டுகிறோம். இயலாமையின் வெளிப்பாடுதான் நம் கோபம். எந்தக் கோபமும் நம் முட்டாள்தனத்தில் பிறந்து, கழிவிரக்கத்தில் முடிகிறது.

'ஆசை, கோபம், கனவு கொள்பவன் பேசத்தெரிந்த மிருகம். அன்பு, நன்றி, கருணை கொண்டவன் மனிதவடிவில் தெய்வம்' என்றார் கண்ணதாசன். அன்பும் நன்றியும் கருயையுணர்வும் பூத்துச் சொரியும் மனங்களிலே தான் மன்னிக்கும் மனோபாவம் மணம் பரப்பும். அடுத்தவர் தவறை மன்னிப்பவன் எவனோ, அவனுடைய தவறை ஆண்டவன் மன்னிப்பான்.

ஒவ்வொரு மனிதன் மனதிலும் மிருகமும் கடவுளும் கலவையாகக் காட்சி தரும். கோபம் என்ற மிருகத்தை வெளியேற்றிவிட்டு, கருணை என்ற கடவுளுக்கு அன்றாடம் ஆராதனை செய்தால் எது நமக்குக் கிடைக்கிறதோ இல்லையோ நிச்சயம் அமைதியான வாழ்வு கிடைக்கும். சூரசம்ஹாரம் போல் இனிக் கோபசம்ஹாரம் செய்வோமாக!

நன்றி: ஆ.வி

# நடிகர் திலகம்

## செவாலியே டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களின்

# சுயசரிதை

50 மீள்பார்வை

## காமராஜர் அடிச்சுவட்டில்...



அரசியல் பொதுக்கூட்டத்தில்...

டி.எஸ்.என்: இத்தனை வெற்றிப் படங்களிலும் நாடகங்களிலும் நடித்துக் கொண்டு இருக்கும்போதே அரசியலில் ஏற்பட்ட சில கசப்பான அனுபவங்களை மறந்து விட்டு மீண்டும் 1962இல் காமராஜரைத் தலைவராக ஏற்று அரசியலில் நுழைந்து தேர்தல் வேலையில் மும்முரமாக ஈடுபட்டீர்களே இது ஒரு விஷப் பரீட்சை அல்லவா?

சிவாஜி: பார்க்கிறவர்களுக்கு வேண்டுமானால் இது ஒரு விஷப்பரீட்சை போல் தோன்றியிருக்கலாம். என்னைப் பொறுத்தவரை நான் பெருந் தலைவர் காமராஜர் மீது அதிகப்பற்றுக்கொண்டிருந்தேன். அவரை எனக்குப் பிடித்திருந்தது. அவரது கொள்கை மற்றும் செயல்கள் என்னைக் கவர்ந்தன. அதை நாட்டிற்குக் கூற அப்போது யாருமில்லை. அவருடைய கொள்கைகளை மக்களுக்குச் சொல்வதற்கு காங்கிரஸில் பிரபலமானவர்கள் அப்போது யாரும் கிடையாது.



எம்.ஜி. ஆரின் வாழ்த்து

அவர் ஒரு தேசியவாதி. தேசியக் கொள்கைகளெல்லாம் காற்றில் பறந்து கொண்டிருந்த நேரம் அது. மற்ற கட்சிகளெல்லாம் கவர்ச்சிகரமாகக்கொள்கைகளை எடுத்துச் சொல்லி மக்களைக் கவர்ந்த அந்த நேரத்தில் காமராஜரின் தேசியவாதக்கொள்கைகளை மக்களிடத்தில் தெளிவாகக் கூறயாருமில்லை.

காமராஜரின் கொள்கைகள் எனக்கு மிகவும் பிடித்திருந்ததால் அதைப் பரப்புவதை என்னுடைய சொந்த வேலையாகவே நான் எடுத்துக்கொண்டேன். அதை நான் ஊருக்கெல்லாம் சொல்லும் பொழுது மற்றவர்கள் அதை காங்கிரஸ் கட்சி வேலையாகக் கருதியிருக்கலாம். எனக்கு காமராஜர் வேண்டும். மற்றவையெல்லாம் பிறகுதான்.

டி.எஸ்.என்: காமராஜருக்காகத் தீவிரமாகத் தேர்தல் பிரசாரத்தில் கலந்துகொண்டு உங்களுடைய நடிப்புத் தொழிலையும் கவனித்துக் கொண்டிருந்தீர்கள். அதன் காரணமாக நீங்கள் நோய் வாய்ப்பட்டு மிகவும் முடியாத நிலைமைக்கு ஆளாகி விட்டீர்கள் அல்லவா?

சிவாஜி: ஆமாம். நீங்கள் சொல்வது சரி. நான் எலெக்ஷன் வேலையாகப் போகும்போது சும்மா போகவில்லை. பல இலட்ச ரூபாய்களுடன் ஒரு பேங்கையே என் கூட எடுத்துச் சென்றேன் .ஏனென்றால் காமராஜருக்குத் துணை செய்ய அப்போது யாருமில்லை. பணம் முழுவதும் ஒரு வேனில் எடுத்துக் கொண்டு ஒவ்வொரு ஊராகச் சென்று அங்குள்ள காமராஜர் தொண்டர்களிடம் தேர்தல் செலவுக்காகப் பணம் கொடுத்தேன்.

தேர்தல் நடக்கும் பொழுது ஒவ்வொரு குடிமகனுக்கும் நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்து வதற்காக ஓட்டுரிமை உண்டு. ஓட்டுப் போட வேண்டிய கடமையும் உண்டு! கட்சியைச் சார்ந்தோ சாராமலோ நல்லவர்களுக்கு ஓட்டுப் போடுங்கள். நல்லாட்சியை ஏற்படுத்துங்கள் என்று சொல்லும் கடமை அப்போது எனக்கு இருந்தது.

தமிழ்நாடு முழுவதும் மட்டுமின்றி இந்தியா முழுவதும் என்னிடம் அன்பும் பற்றும் கொண்ட ரசிகப் பெருமக்கள் பல்லாயிரக் கணக்கானவர்கள் என்னுடன் இருந்தனர். அவர்களையெல்லாம் என் பிள்ளைகள் போல் கருதிதான் அன்பு செலுத்தினேன். அவர்களுக்கெல்லாம் ஒரு நல்வழி காட்டவே தேர்தலின் போது நல்லவர்களுக்கு ஓட்டுப் போடுங்கள் என்று சொன்னேன். பட்டி தொட்டிகளுக்கெல்லாம் சென்று காமராஜருக்காக தேர்தல் பிரசாரம் செய்தேன்.

எண்ணற்ற பொதுக்கூட்டங்களில் பேசிப் பேசி என் தொண்டையே புண்ணாகிப் போய்விட்டது. ஆசனம் வழியாக ரத்தம் வர ஆரம்பித்துவிட்டது. இறந்துவிடுவேனோ என்று கூட நினைத்தார்கள்.

பிறகு மிகவும் முடியாத நிலையில் என்னை மருத்துவ மனையில் சேர்த்து விட்டார்கள். நான் பிழைப்பேனோ மாட்டேனோ என்றாகி விட்டது. கடைசியில் கடவுளின் கருணையாலும் மக்களுடைய நல்லாசியாலும் நான் பிழைத்துக்கொண்டேன்.



கலைஞர்கள், நண்பர்கள், பிரமுகர்களுடன்...

சுகமான பின்பு மீண்டும் காமராஜருடன் வேலை செய்யவும் ஆரம்பித்துவிட்டேன். அது தான் எனக்கும் காமராஜருக்கும் உள்ள இணைபிரியாத கொள்கை கலந்த பந்தமாகும். அவரது அடிச்சுவட்டைப் பின் பற்றி நடந்தபோது என் தேசப்பற்று தீவிரமாகியது.

டி.எஸ்.என்: அப்பொழுது இருந்த சூழ்நிலையில் காமராஜருக்கும் இந்திராகாந்திக்கும் இருந்த கருத்து வேறுபாடுகள் மறைந்து இருவரும் ஒன்றாகச் செயல்பட ஆரம்பித்த பொழுது நீங்கள் அந்தக் கட்சியைச் சார்ந்து இருந்தீர்கள். அப்பொழுது உங்களை பற்றி Sivaji has played a very significant role என்றெல்லாம் செய்தித் தாள்களில் செய்திகள் வந்தன. அதைப்பற்றி உங்கள் கருத்தென்ன?

சிவாஜி: காலத்தினுடைய கட்டாயத்தால் அவர்கள் இருவரும் ஒன்று சேர்ந்தார்கள். அவர்கள் இருவரும் ஒன்று சேருவதற்குப் பலபேர் காரணமாக இருந்திருக்கலாம். அந்த கூட்டத்தில் நானும் ஒருவனாக இருந்திருக்கலாம். ஆகையால்தான் பாண்டிச்சேரியில் காமராஜரும் இந்திராகாந்தியும் பேசும் போது காவிரியும் கங்கையும் ஒன்றாகக் கலந்துவிட்டது என்று பேசினேன். ஏனென்றால் அந்த அம்மாவும் பெரிய தேசியவாதி குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். காமராஜரும் தெற்கில் மிகப்பெரிய தேசியவாதி.

இருவரும் ஒன்று சேர்ந்தால் நாட்டுக்குத்தானே நல்லது. நானும் ஒரு தேசிவாதியினுடைய மகன். ஆகையால் இதை ஆதரித்து புகழ்ந்து பேசும்படியாக ஆகிவிட்டது.

இருவரும் சேர்ந்ததால் தமிழ் நாட்டிற்கு நன்மை பயக்குமென நினைத்தேன். அதனால் அவர்கள் ஒன்று சேர நானும் முயற்சி செய்தேன். காமராஜருடன் அவர் செய்யும் வேலைகளுக்கெல்லாம் உறுதுணையாக நிற்பதில் உண்மையாகவே நான் பெருமகிழ்ச்சியடைந்தேன். இப்போதும் அதை நினைவு கூர்ந்தால் மிகவும் மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது.

(தொடரும்)

# சுனாமியால் பாதிப்புற்றோருக்கு நிரந்தரவீடுகள் அமைப்பு







(திருகோணமலை)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு திருகோணமலை செஞ்சிலுவைச் சங்கம் நிரந்தர வீடுகளை அமைத்து வருகின்றது. ஜப்பானிய செஞ்சிலுவைச் சங்கத்தின் நிதியுதவியுடன் திருகோணமலை கண்டி வீதியில் சுமேதங்கபுர என்னும் இடத்தில் 71 நிரந்தர வீடுகள் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்றது.

இதில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் பொதுச் செயலாளர் எஸ்.எச்.நிமால்குமார் கலந்துகொண்டு அடிகல்லினை நாட்டி வைத்தார். ஜப்பானிய செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதி சத்தோச, திருகோணமலை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் மருத்துவ முனைவர் ஞானகுணாளன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

திருகோணமலை சுமேதகமவில் வசித்த 18 குடும்பத்தினருக்கும், மனையா வெளியில் வசித்த 10 குடும்பத்தினருக்கும், கடற்படைத்தள வீதியில் வசித்த 6 குடும்பத்தினருக்கும், ஏகாம்பரம் வீதியில் வசித்த 15 குடும்பத்தினருக்கும், திருக்கடலூரில்வசித்த 10 குடும்பத்தினருக்கும், வீரநகரில் வசித்த 12 குடும்பத்தினருக்கும் இங்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது. ஒவ்வொரு வீடுகளும் தலா பத்து இலட்சம்ரூபா செலவில் அமைக்கப்படுகின்றது. அத்துடன் பொது வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக இரண்டு இலட்சம் ரூபாய்கள் செல விடப்படவுள்ளது. இவர்களுக்கு தலா பத்துபேர்ச்சில் 550 சதுர அடிகள் கொண்டதான வீடும் அதில் மின்சார இணைப்பு, குழாய்நீர் இணைப்பு என்பனவற்றுடன் உள்வீதிகளும் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் பொதுச் செயலாளர் எஸ்.எச் நிமால்குமார் இந்நிகழ்வில் உரையாற்றுகையில் சுனாமி தாக்கம் ஏற்பட்டு 1 வருடம்கடந்தநிலையிலும் பாதிக்கப்பட்டவர்கள் இன்னமும்நிரந்தர வீடுகளில் குடியமர்த்தப்பட்டிருக்கவில்லை. இந்த ஆண்டு சித்திரை மாதத்திற்கு முன்னதாக இலங்கை முழுவதும் நாங்கள் 15 ஆயிரம் நிரந்தர வீடுகளை அமைத்து பாதிக்கப்பட்டவர்களுக்குக் கையளிக்க இருக்கின்றோம். எமக்கு பல்வேறு நாடுகளையும் சேர்ந்த செஞ்சிலுவைச் சங்கங்கள் நிதி உதவிகளை வழங்கி வருகின்றது. இன, மத, மொழி வேறுபாடுகள் இன்றி நாங்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவையாற்றி வருகின்றோம் என்றார்.

ஜப்பானிய செஞ்சிலுவைச் சங்கத்தின் திருகோணமலைக்கான பிரதிநிதி சத்தோச உரையாற்றுகையில், நாங்கள் வீடுகளை அமைத்துக் கொடுக்கும் அதே சந்தர்ப்பங்களில் சுகாதார வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்து வருகின்றோம். கண்பார்வை குறைபாடு உடையவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகளையும் கண்களில் வெண்படலம் படர்ந்தோரை மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்று இலவச சத்திர சிகிச்சைகளையும் வழங்கி வருகின்றோம் என்றார். திருகோணமலை செஞ்சிலுவைச் சங்கம் கோணேசபுரி என்னும் இடத்தில் 193 வீடுகளையும் கிண்ணியாவில் 100 வீடுகளையும் பாதிக்கப்பட்ட வர்களுகாக அமைத்து வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

(நு)

# இந்திய நக்சலைட்டுகளுக்கும் எமக்கும் தொடர்பெதுவுமில்லை

## மாவோ தலைவர் எச்சரிக்கை

இந்தியாவில் உள்ள நக்சலைட்டுகளுடன் கொள்கை ரீதியான உறவுமட்டுமே வைத்துள்ளோம். தாக்குதல் போன்ற விடயங்களில் அவர்களுக்கும் எங்களுக்கும் எந்த உறவும் இல்லை என நேபாள மாவோயிட்ஸ்ட் தலைவர் பிரசந்தா கூறினார்.

நேபாளத்தில் மன்னராட்சியை எதிர்த்து மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இவர்களுக்கும் இந்தியாவில் உள்ள நக்சலைட் தீவிரவாதிகளுக்கும் தொடர்பு இருப்பதாக பரவலாக பேசப்பட்டது. தாக்குதல் நடவடிக்கைகளில் இருவரும் இணைந்து செயல்படுவதாகவும் கூறப்பட்டது. இந்நிலையில் இந்தியாவில் உள்ள நக்சலைட்டுகளுடன் கெள்கை ரீதியான உறவு மட்டுமே உள்ளது. என நேபாள மாவோயிஸ்ட்டுகளின் தலைவர் பிரசந்தா கூறியுள்ளார்.

மறைவாக வாழ்ந்து வரும் பிரசந்தா செய்தி நிறுவனம் ஒன்றுக்கு இது தொடர்பாக அளித்த பேட்டியில் கூறியுள்ளதாவது இந்தியாவில் உள்ள நக்சலைட்டுகளும் நாங்களும் கம்யூனிஸ்ட்டுகள் எங்கள் இரு தரப்பினருக்கும். இடையே கொள்கை ரீதியிலான உறவு மட்டுமே உள்ளது. தாக்குதல் தொடர்பான நடவடிக்கைகளில் எங்களுக்கு இடையே எந்த உறவும் இல்லை. புரட்டு மற்றும் இயக்கத்தை ஏற்றுமதியோ அல்லது இறக்குமதியோ செய்ய முடியாது இந்தியா அவர்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்பது அங்குள்ள நக்சலைட்டுகளின் கொள்கை. நேபாளம் என்ன செய்ய வேண்டும் என்பது எங்களது கொள்கை.

ஜனநாயக தாகத்தோடு உள்ள நேபாள மக்களின் விருப்பம் ஒருநாள் நிறைவேற்றப்படும். நேபாளத்தில் அமைதியும், ஜனநாயகமும் ஏற்படும்போது அமெரிக்கா உட்பட அனைத்து நாடுகளுடனும் அரசியல் ரீதியான உறவை ஏற்படுத்துவோம். அமெரிக்கா, எங்குமே மக்களின் முன்னேற்றத்திற்காக பாடுபட்டது இல்லை தனது சுயநலத்துக்காக மட்டுமே அந்நாடு பணியாற்றுகிறது. அந்நாடு ஏழை மக்களின் முன்னேற்றத்திற்காக பாடுபடும் என்ற நம்பிக்கை இல்லை.

எங்களது போராட்டத்திற்கான நிதி உதவியை தெற்காசிய நாடுகளிடமிருந்தோ, தனி நபர்களிடமிருந்தோ பெறவில்லை. நேபாள மக்களின் உதவியுடன் தான் போராட்டம் நடக்கிறது. இந்த போராட்டத்திற்காக எந்த சர்வதேச அமைப்புகளையும் நாங்கள் சார்ந்திருக்கவில்லை என்பதில் பெருமைப்படுகிறோம். நாம் அமைதி பேச்சுவார்த்தைக்கு தயாராகவுள்ளோம்.

அதற்கு முன்பாக ஆளும் தரப்பு, மக்களின் பிரச்சினைகளுக்கு அமைதியான முறையில் தீர்வுகாண வேண்டும். நேபாளத்தில் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டதால் அங்கு கண்டிப்பாக ஜனநாயக ஆட்சி அமையும், தேர்தல் நடத்தப்படுவதன் மூலம் நேபாள மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்படும் நாட்டில் பொருளாதார முன்னேற்றமும் ஏற்படும் என்றார். (த)

WORLD NEWS உலக தரிசனம்

# மனித வெடிகுண்டுத் தாக்குதல்; ஈராக்கில் 15 பேர் பலி!

(பக்தாத்)

ஈராக்கில் தீவிரவாதிகள் தொடர்ந்து தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர். பக்தாத் நகரில் கிழக்குப் பகுதியில் உள்ள ஒரு இடத்தில் பொதுமக்களுக்கு ரேஷன் பொருட்கள் வாங்குவதற்காக வங்கியில் பணம் பட்டுவாடா செய்யப்பட்டது. இதை வாங்குவதற்காக ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என 70 பேர் வரிசையில் நின்றனர்.

அப்போது உடலில் வெடிகுண்டை கட்டியிருந்த தீவிரவாதி ஒருவன் அந்த வரிசையில் வந்து நின்றான். வரிசையில் நின்ற ஒவ்வொருவரையும் பொலிஸார் சோதனை செய்த பிறகே உள்ளே அனுமதித்தனர். அப்போது அவன் குண்டை வெடிக்கச்செய்தான்.

இதில் 15பேர் அந்த இடத்திலேயே உயிர் இழந்தனர். 30பேர் படுகாயம் அடைந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் பெண்கள் மற்றும் குழந்தைகள்.

ஈராக்கில் கடந்த 24மணி நேரத்தில் பல்வேறு இடங்களில் நடந்த தீவிரவாதி களின் தாக்குதலில் 14பேர் கொல்லப்பட்டுள்ளனர். இதற்கிடையே முகாதியாத் என்ற இடத்தில் பதுங்கி இருந்த தீவிரவாதி ஒருவனை அமெரிக்க இராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர். 16பேர் கைது செய் யப்பட்டனர். (த)

# அமெரிக்க மாணவரை சுட்டுக்கொன்ற இந்தியர்

(கிளீவ்லாண்டு)

பல்கலைக்கழக வளாகத்தில் மாணவரை சுட்டுக்கொன்ற இந்தியருக்கு எதிர்வரும் 17ஆம் திகதி அமெரிக்க நீதிமன்றம் தண்டனை வழங்குகிறது.

இந்தியாவை சேர்ந்தவர் பிஸ்வநாத் ஹல்டர் (65) கடந்த 2003மே மாதம் அமெரிக்காவில் உள்ள கேஸ் வெஸ்டர்ன் ரிசர்வ் பல்கலைக்கழக வளாகத்துக்குள் 30 வயதான நார்மன் வாலஸ் என்ற மாணவரை துப்பாக்கியால் சுட்டுக்கொன்றார். இந்த கொலைக்காக இவர் மீது 196பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டுக்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில் சிறையில் இருக்கும் பிஸ்வநாத் கடந்த வாரம் 'அசோசியேட் பிரஸுக்கு பேட்டியளிக்கையில்' என்னுடைய இந்த வன்முறை செயல்பற்றி எனக்கு எந்த வருத்தமும் இல்லை.


இந்திய தொழில் முனைவோருக்கு உதவுவதற்காக இணையத் தளம் ஒன்றை உருவாக்கினேன். இந்த இணையத் தளம் யாரோ ஒரு நபரால் அழிக்கப்படுவதற்கு இந்த பல்கலைக்கழகம் தான் காரணம். இந்த பிரச்சினையில் நான் எதுவும் செய்யவில்லை என்றால் நான் மனித இனத்துக்கு எதிராக செயல்பட்டது போல் ஆகிவிடும். இந்த சம்பவம் பற்றி எல்லோரும் முழுமையாக அறிந்திருந்தால் தான் விடுதலை ஆகியிருப்பேன் என நினைக்கிறேன் என்றார். (த)

## எலிசபெத் ராணியின் ஆடை, நகை கண்காட்சி

(லண்டன்)

இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத்தின் 80ஆவது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அவரது ஆடைகள், நகைகள் கண்காட்சி புகழ்பெற்ற பக்கிங் ஹாம் அரண்மனையில் நடைபெறவுள் ளது.

1940ஆம் ஆண்டிலிருந்து இப்போது வரை அரசு நிகழ்ச்சிகளிலும், குடும்ப நிகழ்ச்சிகளிலும் எலிசபெத் ராணி அணிந்த எழில்மிகு மாலை நேர கவுன்கள் உட்பட 80வகையான ஆடைகள் முதல் முறையாக மக்கள் பார்வைக்கு வைக்கப்படவுள்ளன. (த)



அமெரிக்காவில் டெக்சாஸ் மாகாணத்தில் கவ்பாய் திருவிழா நடந்தது. இதில் கவ்பாய் வேடமணிந்தவர்கள் குதிரையில் செல்கின்றனர்.

# 25 தமிழர்கள் கொத்தடிமைகளாக மலேசியாவுக்கு விற்கப்பட்டனர்

(சென்னை)

மலேசிய நாட்டிற்கு தமிழகத்தைச் சேர்ந்த 25பேர் கொத்தடிமைகளாக விற்கப்பட்டுள்ளனர். இதுபற்றி அங்கிருந்து சென்னைக்கு தப்பிவந்த 3பேர் பொலிஸாரிடம் புகார் கொடுத்துள்ளனர்.

திருநின்றவூரைச் சேர்ந்த செந்தில் குமார் (வயது 30), பிரபு (வயது 32), பட்டாபிராமைச் சேர்ந்த கோபிநாத் (வயது 25) ஆகிய 3பேரும் சென்னை மாநகர பொலிஸ் கமிஷனர் நட்ராஜிடம் நேற்று முன்தினம் ஒரு புகார் கொடுத்தனர்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. வேலூரில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் தாதியாக இருக்கும் ராஜலட்சுமியின் அறிமுகம் எங்களுக்கு கிடைத்தது. அவரது அண்ணன் ராஜன்பாபு மற்றும் வெங்கடேசன் ஆகியோர் வெளிநாட்டுக்கு ஆட்களை அனுப்புவதாக அவர் எங்களிடம் கூறினார். நாங்கள் ஐ.டி.ஐ. படித்துள்ளோம். எங்களுக்கு வேலை கிடைக்குமா? என்று ராஜலட்சுமியிடம் கேட்டோம். அதன்பின்னர் ராஜன்பாபு, வெங்கடேசன் ஆகியோரை அறிமுகம் செய்து வைத்தார்.

எங்களை மலேசியாவுக்கு அனுப்புவதாகவும் தலா ஒரு இலட்சம் ரூபாய் தரவேண்டும் என்றும் அவர்கள் கூறினார்கள். அவர்களின் பேச்சை நம்பி நாங்கள் பணம் கொடுத்தோம். எங்களோடு சேர்ந்து மேலும் 22பேரையும் மலேசியாவுக்கு அனுப்பி வைத்தனர். அவர்களிடமும் தலா ஒரு லட்சம் ரூபாய் வாங்கியிருந்தனர்.

மலேசியாவில் எங்களுக்கு எலக்ட்ரீஷியன் வேலைகொடுக்கவில்லை. கோலாலம்பூர் அருகில் உள்ள ஜோகு என்ற இடத்தில் காடுகளை அழித்து நகரம் உருவாக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டோம். அப்போதுதான் நாங்கள் 25பேரும் கொத்தடிமைகளாக விற்கப்பட்டோம் என்றும் 3 ஆண்டுகளுக்கு சம்பளம் கிடையாது என்றும் அதன்பிறகு மாதம் ரூ.2 ஆயிரம் சம்பளமாக வழங்கப்படும் என்றும் தெரிந்து கொண்டோம்.

மேலும் ஒருநாளுக்கு ஒரு நேரம் மட்டுமே சாப்பாடு கொடுத்தனர். காடுகளில் தங்கினோம். இதனால் மிகவும் கஷ்டப்பட்டோம். கடந்த 10 நாட்களுக்கு முன்னர் ஜோகு பகுதியில் இருந்து ரயில் மூலம் கோலாலம்பூர்தப்பிவந்தோம். அங்கு உள்ள தமிழர்கள் உதவியுடன் சென்னை வந்தோம்.

எங்களுடன் மலேசியா சென்ற 22 பேரும் கொத்தடிமைகளாக வேலை செய்கின்றனர்.


எங்களை அனுப்பிய ராஜன்பாபு வெங்கடேசன் ஆகியோர்களிடம் பணத்தை திருப்பிக் கேட்டால் தர மறுக்கின்றனர். இதனால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுள்ளது.

இதுபற்றி பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகிறார்கள். (த)

# அமெ.துணை அதிபரின் துப்பாக்கிச் சூட்டில் சட்டத்தரணி காயம்

(வோஷிங்டன்)

வேட்டையாடும்போது அமெரிக்கத் துணை அதிபர் டிக்செனி சுட்டதில் அவருடன் சென்ற நண்பருக்கு கழுத்தில் குண்டுகள் பாய்ந்தன.



டிக்செனி

அமெரிக்கத் துணை அதிபர் டிக்செனியும் அவருடைய நண்பரும் பிரபல வக்கீலுமான ஹாரி விட்டிங்டன் இருவரும் கடந்த 11ஆம் திகதி வேட்டை யாட டெக்சாஸ் மாகாணத்திலுள்ள ஒரு பண்ணைக்கு சென்றனர்.

அப்போது கவுதாரி பறவைகள் கூட்டமாக வந்தன. இதைப் பார்த்து டிக்செனி துப்பாக்கியால் சுட்டார். பறவைகள் கூட்டத்தைக்கண்ட மகிழ்ச்சியில் ஹாரி குறுக்கே வந்துவிட்டார். அப்போது டிக்செனிசுட்ட தோட்டக்கள் எதிர்பாராமல் ஹாரியின் கன்னம், கழுத்து மற்றும் நெஞ்சு ஆகிய பகுதிகளில் பாய்ந்து காயம் ஏற்பட்டது.



ஹாரி விட்டிங்டன்

இதையடுத்து டிக்செனியுடன் வந்த மருத் துவக் குழு வினர் அவ ருக்கு முதலுதவி அளித்தனர். பின்னர் அவர் கார்பஸ் கிறிஸ்டி மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டார்.

மனிதனிடம் வீரமில்லாத ஒழுக்கமோ, ஒழுக்கமில்லாத வீரமோ இருந்தால் அவன் கோழையாகவோ, முரடனாகவோ ஆகிவிடுவான்.

-பிளேட்டோ

வலம்புரி

## இனவாதிகளை ஆற்றுப்படுத்துவதில் ஜனாதிபதி மகிந்த தீவிரம்

யுத்தநிறுத்த உடன்படிக்கையை அமுல்படுத்துவது தொடர்பான பேச்சுவார்த்தைகள் ஜெனீவாவில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகும் தருவாயில் உள்ளது.

அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நடைபெறப்போகும் பேச்சுவார்த்தைகள் யுத்தநிறுத்த உடன்படிக்கையை அமுல்படுத்துவது பற்றியதேயன்றி இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றியதல்ல.இதனை தமிழீழ விடுதலைப்புலிகள் ஆணித்தரமாகத் தெரிவித்துள்ளனர்.

எனவே இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து எதுவித கருத்தும் எந்தத் தரப்பாலும் தெரிவிக்க வேண்டிய தேவைப்பாடு இருக்க மாட்டாது.

ஆனால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அடிக்கடி இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து கருத்துத் தெரிவித்து நிலைமையை மோசமாக்கி வருகின்றார்.

குறிப்பாக ஒற்றையாட்சிக்கு உட்பட்டதாகவே தீர்வு காணப்படும்; தமிழர்களின் தாயகக் கோட்பாடு எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பது ஜனாதிபதி மகிந்த கடந்த சில நாட்களுக்கு முன்னர் தெரிவித்த கருத்து.

ஐயா, நடைபெறப்போகும் பேச்சுவார்த்தை யுத்தநிறுத்த உடன்படிக்கை பற்றியது. இதில் ஓர் இணக்கப்பாட்டிற்கு வந்தால் மட்டுமே சமாதானப் பேச்சுவார்த்தைகள் சாத்தியமாகும்.விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரை அவர்கள் சமாதானத்தை வரவேற்கின்றனர்.

சமாதானத்தை வரவேற்கின்றனர் என்பதற்காக தாம் முன்வைப்பதெல்லாம் ஏற்றுக் கொள்வார்கள் என அரசு கருதுமாயின் அதைவிடத் தவறு வேறு எதுவுமாயிருக்க முடியாது.

விடுதலைப்புலிகள் படைப்பலத்திலும், ஆட்பலத்திலும் உன்னதமான இடத்தில் இருக்கின்றார்கள். அவர்களின் படைப்பலத்திற்கு முன்னால், அரச படைகள் யுத்தம் தொடுக்குமாயின் அதனது முடிபு இலங்கை இரண்டாகப் பிரிவதாகவே அமையும்.

இந்த உண்மையைப் புரியாமல் யதார்த்தத்திற்கு மாறான கருத்துக்களை வெளிப்படுத்துவது சமாதானத்தை இல்லாது ஒழிப்பதாகவேயிருக்கும்.

ஆக , விடுதலைப்புலிகளுடனான பேச்சுக்களின் போது அரசு வெற்றியடைய வேண்டுமாயின், முதலில் யுத்தநிறுத்த உடன்படிக்கையை அமுல்படுத்தும் விடயத்தில் ஓர் சுமுகமான இணக்கப்பாட்டை அடைய வேண்டும்.

அதன் பின்னர் சமாதானப் பேச்சை ஆரம்பிக்க வேண்டும். இதற்கெல்லாம் செய்யும் முதல் பரிகாரம் அரச தரப்பு நாவடக்கத்தை இறுக்கமாகக் கடைப்பிடிப்பதாகவிருக்கும்.

# வடக்கு-கிழக்கில் ஆரோக்கியமான கல்விச் சூழலை ஏற்படுத்த கல்வி அமைச்சர் உறுதி

## இ.த.ஆ.சங்க தூதுக்குழுவிடம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதில் தெளிவாகவும் உறுதியாகவும் உள்ளார் என்றும் பாடசாலை சூழலில் உள்ள படையினரின் சோதனைச் சாவடிகள் படையினரின் பிரசன்னம் ஆகியவை படிப்படியாகக் குறைக்கப்பட்டு ஆரோக்கியமான கல்விச்சுழல் ஏற்படுத்தப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் கல்வி உயர் கல்வி அமைச்சர் சுசில் பிறேமஜெயந்த தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தூது க்குழுவொன்று இசுறுபா யவிலுள்ள கல்வி அமைச்சரின் அலுவலகத்தில் அமைச்சரைச் சந்தித்து தமிழ் மொழிமூலக் கல்விப் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடிய போதே கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இச் சந்திப்பின் போது வடக்கு–கிழக்கில் படையினரின் சோதனைகள் , கெடுபிடிகள், கைதுகள் போன்றவற்றால் ஆரோக்கி யமான கல்விச் சுழல் இல்லையென்பதைச் சுட்டிக் காட்டிய சங்கத் தூதுக்குழு, படையினரை பாடசாலைச் சுழலில் இருந்து நீக்கி ஆரோக்கியமான கல்விச் சுழலை ஏற்படுத்த வேண்டும் எனக் கோரிய போதே அமைச்சர் மேற்படி உறுதி மொழியை வழங்கினார்.

தென் இலங்கையில் இருக்கு ம் தீவிரவாத சக்திகளையும் திருப்திப்படுத்தி செயற்பட வேண்டிய தேவை இருப்பதாலேயே படிப்படி யாக நிலைமையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியுள்ளதாகத் தெரிவித்த கல்வி அமைச்சர் , விரைவாக சமாதானச் சுழலில் மாணவர்கள் கற்க்க கூடிய நிலை வரும் எனவும் நம்பிக்கை தெரிவித்தார்.

### பல்கலைக்கழக அனுமதி

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் அனுமதிக்கப்படும் போது தமிழ்மாணவர்களுக்குப் பாரபட்சம் காட்டப்படுகின்றமை பற்றி தூதுக்குழு சுட்டிக்காட்டி தமிழ் முஸ்லிம் மாணவர்களுக்கு நீதி கிடைக்க ஆவன செய்யவேண்டும் என வலியுற்றுத்திய போது சகலருக்கும் சமவாய்ப்பு அளிப்பதை உறுதிப்படுத்துவதாகத் தெரிவித்தார்.

யாழ். , கிழக்குப் பல்கலை லக்கழ கங்களுக்கெனத் தெரிவு செய்யப்படும் மாணவர்கள் பின்னர் வேறு பல்கலை லக்கழகங்களுக்கு மற்றம் பெறுவதால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாகச் சங்கம் சுட்டிக்காட்டிய போது எதிர்காலத்தில் அவ்வாறான மாற்றங்களை அனுமதிக்கப்போவதில்லையெனவும் அமைச்சர் உறுதிய ளித்தார்.

### தொண்டர் ஆசிரியர்கள்

வடக்கு, கிழக்கில் கடமையாற்றும் சுமார் 6 ஆயிரம் தமிழ் மொழிமூல தொண்டர் ஆசிரியர்களில் 495 பேர் மட்டுமே நிரந்தரமாக்கப்பட்டுள்ளனரெனவும், 1995 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாகச் சேவையாற்றிவரும் அடிப்படைத் தகுதிகள் அனைத்துமுள்ள ஆயிரக்கணக்கானவர்க ளுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படாமல் இருக்கிறார்கள் எனவும் தூதுக்குழு அமைச் சருக் குச் சுட்டிக்காட்டிய போது , சகல தகுதிகளும் இருந்தும் நிரந்தரமாக்கப்படாதவர்கள் தொடர்பாக வடக்கு–கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின்செயலாளிடம் அறிக்கையைப் பெற்றுத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அமைச்சர் உறுதியளித்தார்.

### பாடநூல்விநியோகம்

8ஆம் தர மாணவர்களுக்கான பாட நூல்கள் பாடசாலைகள் ஆரம்பமாகி இரண்டு மாதங்கள் முடிவடையும் நிலையில் கூட தமிழ் முஸ்லிம் மாாணவர்களுக்கு வழங்கப் படாதிருப்பதைத் தூதுக்குழு அமைச்சருக்கு சுட்டிக்காட்டிய போது அதற்குப் பதிலளித்த கல்வி அமைச்சர், பாடநூல் விநியோகத்தை விரைவாகசெய்து முடிக்குமாறு அதிகாிகளை பணித்ததோடு எதிர்காலத்தில் இவ்வாறு நடை பெறாதிருப்பதற்கான முன்னேற்பாடுகளை மேற்கொள்வதாகவும் உறுதியளித்தார்.

### பாட நூலில் குளறுபடிகள்

புதிதாக வெளியிடப்படும் பாடநூல்களில் எழுத்துப்பிழைகள்,கருத்துப்பிழைகள், இலக்கணப்பிழைகள், தரக் குறைவான வசன நடைபோன்ற பல குளறுபடிகள் காணப் படுகின்றன என கடந்த வருடங்களில் சங்கம் சுட்டிக்காட்டி ய போது அவை திருத்தப்படும் எனவும் எதிர்காலத்தில் இவ்வாறான பிழைகள் நடவாது எனவும் உறுதிமொழி வழங்கப்பட்ட போதிலும் இவ் வருடம் வெளியிடப்பட்ட நூல்களிலும் நிலைமகள் மாறவில்லை என சங்கத்தூதுக்குழு சுட்டிக்காட்டியது.

இதனைக் கவனத்தில் எடுத்த அமைச்சர் , எதிர்காலத்தில் நூலின் பிரதியை இறுவட்டில் தருவதாகவும் அதில் உள்ள பிழைகளை திருத்தி சங்கம் தந்த பின்னர் வெளியிட நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார். அத்துடன் இம் முடிவை நடைமுறைப்படுத்துமாறு வெளியீட்டுத்திணைக்களம் உதவி ஆணையாளருக்கும் ஆலோசனை வழங்கினார்.

அமைச்சருடன் அமைச்சின் இணைப்புச் செயலாளர் பண்டார, கல்விப்பணிப்பாளர் வ. குணரட்ண , கல்வி வெளி யீட்டு ஆணையாளர் மதிவதனம் ஆகியோர் கலந்துகொண்ட னர்.

சங்கத்தின் பொதுச்செயலாளர் த. மகாசிவம்தலைமையில் சென்ற தமிழர் ஆசிரியர் சங்கத்தூதுக்குழுவில் சிரேஷ்ட துணைப்பொதுச்செயலாளர் த.புஞ்சலிங்கம், துணைத் தலைவர் திருமதி ஈ.ஜே. மகேந்திரா , துணைப்பொதுச் செய லா ளர் எஸ் .நாகேந்திரராசா ஆகியோர் கலந்து கொண்டனர். (து)

## வளர்ச்சிக்கு முதன்மை கொடுப்பவரே உபவேந்தராக நியமிக்கப்பட வேண்டும்

### வட–கிழக்கு முஸ்லிம் பேரவைத்தலைவர்

தென்கிழக்குப்பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கு முதன்மை கொடுத்து சேவையாற்றும் ஒருவரே அடுத்த உபவேந்தராக நியமிக்கப்படவேண்டும். அவ்வாறு நியமிக் கப்படுபவர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவராகத்தான் இருக்க வேண்டுமென்பது முக்கியமல்ல.

இவ்வாறு வடக்குக் –கிழக்கு முஸ்லிம் பேரவையின் தலைவரும் அக்கரைப்பற்று சமாதான மன்றத்தின் தலைவருமான வைத்திய கலாநிதி எஸ்.எம்.ஏ.ஜப்பார் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அடுத்த உபவேந்தரை நியமிக்கும் முஸ்தீபுகள் இடம்பெற்றுவரும் இவ்வேளையில், மேற்படி அமைப்புக்கள் சார்பாகத் தலைவர் வைத்திய கலாநிதி ஜப்பார் இந்த அறிக்கையை விடுத்துள்ளார். இந்த அறிக்கையில் மேலும் தென்கிழக்குப் பல்கலைக் கழகம் மறைந்த தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப்பின் பெரு முயற்சியினால் உருவாக்கப்பட்டது.

இப் பல்கலைக்கழகம் வட கிழக்குப் பல்கலைக்கழகங்களில் இருந்து இடம் பெயர்ந்த முஸ்லிம் மாணவர்களுக்காக ஏற்படுத்தப்பட்டதாயினும் இன்று தமிழ் முஸ்லிம் மாணவர்களையும் மூவின உத்தியோகஸ்தர்களையும் கொண்ட தேசியப் பல்கலைக்கழகமாக உருப்பெற்றுத்திகழ்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

## நீதிமன்றம் உத்தரவு

அரசியல் யாப்பு சபையை மீள உருவாக்கக் கோரி மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் தாக்கல் செய்த வழக்கில் அரச தரப்பினர் பதிலளிக்க கொழும்பு மேல்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் கட்டளை அனுப்பியது.

அரசியல்யாப்புசபையைமீளஉருவாக்கவேண்டும்என்றும் பொலிஸாரின் இடமாற்றம் தொடர்பான தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினது அதிகாரத்தை பொலிஸ்மா அதிபருக்கு மாற்றியதை எதிர்த்தும் வழக்குத் தொடரப்பட்டது.

இந்தவழக்கில்பொலிஸ்மா அதிபர்சந்திரா பெர்னாண்டோ, பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர் கொட்டகதெனிய ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. பிரதமர் ரட்ண சிறி விக்கிரமநாயக்க எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்ற சபாநாயகர் லொக்குப்பண்டார, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர் கொட்டகதெனிய மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த வழக்கின் பிரதி வாதிகளாக சேர்க்கப்பட்டிருந்தனர். மாற்றுக் கொள்கைக்கான மையத்தின் தலைவர் பாக்கிய சோதி சரவண முத்து இம் மனுவை தாக்கல் செய்திருந் தார். அவர் சார்பில் சுமந்திரன் நீதிமன்றில் முன்னிலையானார். வழக்கை விசாரித்த நீதிபதிகள் கே.சிறிபவன் மற்றும் சிசிரடி அப்ரியு ஆகியோர் பிரதி வாதிகளை பதில் மனுத்தாக்கல் செய்யுமாறு உத்தரவிட்டனர். (து)

## சிறிசேன கூரேக்கு கடும் எதிர்ப்பு!

(கொழும்பு)

கொழும்பு மாநகர சபையின் மேயர் வேட்பாளராக சிறிசேன கூரேயை நியமிக்க ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் குழு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டம் கொழும்பில் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மிலிந்த மொறகொட, எம்.எச்.எம்.மகறூப் இருவரும் சிறிசேன கூரேயை மேயர் வேட்பாளராக முன்மொழிந்தனர். ஆனால் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதை நிராகரித்து வேறு ஒருவரை மேயர் வேட்பாளராகப் பரிந்துரைத்தனர்.

தற்போதைய பிரதி மேயர் ஆசாத் அலியை பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தக் கூட்டத்தில் ஆதரித்தனர் . இதனால் அக்கட்சியின் கொழும்பு மேயர் வேட்பாளராக அவரே அறிவிக்கப்படக்கூடும் என்று கூறப்படுகிறது.

மேலும் சிறையில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் எஸ்.பி.திஸநாயக்கவை விடுவிக்க கோரி ஜனாதிபதி மஹிந் தவை சந்திக்கவும் இந்தக் கூட்டத்தில் ஒரு மனதாகத் தீர்மானிக்கப்பட்டது. இதற்கான தீர்மானத்தை முதலில் ரணல் விக்கிரமசிங்கவும் அதன் பின்னர் களுத்துறை நாடாளுமன்ற உறுப்பினர்ராஜித சேனாரட்ணவும் முன்மொழிந்தனர் . அதேபோல் இலங்கை அரசியல் யாப்பின் 17ஆம் சரத்தின் கீழான சுயாதீன ஆணைக் குழு உருவாக்கம் செய்யும் கோரிக்கையும் இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. (து)

### தினசரி தியானம்
### விவேகச் சிந்தனைகள்



பிறப்பு, இறப்பு, முதுமை, நோய் ஆகிய அனைத்தும் துக்கமயமானதுதான். இவற்றைக் கொணட உலக வாழ்க்கையும் துன்பம் நிறைந்ததுதான். ஜீவன் நீண்ட நெடுங்காலமாக இத்தகைய துன்பத்தில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறது.

# சமாதானப் பேச்சுவார்த்தை என ஏமாறாமல் புலிகளின் கரங்களைப் பலப்படுத்துவோம்

## தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் நோர்வேயின் சமாதானத் திற்கான விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இலங்கை அரச தலைவர்களையும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைப் பீடத்தையும் சந்தித்து முறிவடைந்து போயுள்ள சமாதான நடவடிக்கைகளை மீளக் கட்டியெழுப்புவதற்கும் செயலற்றுப் போயுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையும் நடைமுறைப் படுத்தும் நோக்கோடும் மீண்டும் ஜெனீவாவில் பேச்சுவார்த்தையை நடத்துவதற்கு இரு தரப்பிலும் இணக்கம் காணப்பட்டு திகதியும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்தச் சமாதானப் பேச்சுவார்த்தை மீது இரு தரப்பினரும் கொண்டுள்ள ஆர்வம் என்பது முற்றிலும் வேறுபட்டுள்ளதாகவே காணப்படுகின்றது எனத் தேசிய விழிப்புணர்வுக் கழகம் தெரிவித்துள்ளது.

தமிழர் தாயகப் பகுதிகளில் ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிராக மக்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த மக்கள் படைத் தாக்குதல்கள் பேச்சுவார்த்தைக்கு இருதரப்பும் இணக்கம் காணப்பட்ட அடுத்த கணத்திலிருந்து நிறுத்தப் பட்டிருக்கின்றது.

ஆனால்; இராணுவத்தின் சுற்றி வளைப்புக்கள், கைதுகள், சித்திரவதைகள், பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்ந்த வண்ணமேயுள்ளன. இராணுவத்திற்குப் பொறுப்பான சரத் பொன்சேகா இது இன்னமும் தீவிரப் படுத்தப்படும் என செய்திகள் வெளியிட்டிருக்கின்றார். இவ்வாறான சூழலில் அரசாங்கம் சமாதா னப் பேச்சுவார்த்தைமீது நம்பிக்கை கொண் டுள்ளதா? என்ற கேள்வியே தமிழ் மக்கள் மனங்களில் மேலோங்கி நிற்கின்றது.

எனவே; தமிழ் மக்களாகிய நாம் மீண்டுமொரு தடவை சமாதானம் , பேச்சுவார்த்தை என்று ஏமாற்றம் அடையாது எமது சுதந்திரத்திற்காக கௌரவமான உயர்ந்த வாழ்வுக்காக போராடிக்கொண்டிருக்கின்ற எமது தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பின்னால் அணி திரண்டு தேசியத் தலைவரின் கரங்களைப் பலப்படுத்தி எமது மண்ணை நாமே மீட்டெடுப்போம் என தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

## திஸநாயக்காவை விடுதலை செய்ய ஐ.தே.கட்சி யோசனை நிறைவேற்றம்

சிறைவாசம் அனுபவிக்கும் முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்காவை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்ற யோசனை ஒன்றை ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்றக் குழு நிறைவேற்றியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்றக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் பாராளுமன்றக் கட்டடத்தொகுதியில் இடம்பெற்றது. இதன் போதே இந்த யோசனை நிறைவேற்றப்பட்டுள்ளது. எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 3 லட்சத்து50 ஆயிரம் மக்களின் வாக்குரிமை பறிக்கப்படப் போவதாகவும் இவ்விடயம் தொடர்பாக தேர்தல் ஆணையாளர் நீதிமன்றத்திடம் தெரிவித்த கருத்தானது அரசியல் அமைப்பின் 17 ஆவது திருத்தத்திற்கு எதிரானது என்றும் ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

வாழ்க்கைச் செலவு நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் அரசாங்கத்தின் மக்கள் விரோத செயற்பாட்டிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(ச-39)

## மகிந்தவின் சிந்தனையின்...

மகிந்த சிந்தனைகளில் சமாதான நடவடிக்கைகள் உட்பட பல்வேறு விடயங்கள் பற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அதற்கு அமையவே பேச்சுவார்த்தைகள் நடைபெறவேண்டும். ஜெனீவாப் பேச்சுவார்த்தைகளின்போது ரணில் விக்கிரமசிங்கவுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையைப் பலப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளக்கூடாது.

யுத்தநிறுத்த உடன்படிக்கையில் பல்வேறு குறைபாடுகள் உள்ளன. அந்தக் குறைபாடுகளைத் தவிர்த்து நிரந்தர கௌரவமான சமாதானத்தை ஏற்படுத்திக் கொள்ளும் வகையில் ஜெனீவாப் பேச்சுக்கள் அமைய வேண்டும்.

அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானச் செயற்பாடுகளில் தொடர்ந்தும் நோர்வே நாடே மத்தியஸ்தம் வகிக்கின்றது.

நோர்வேயின் மத்தியஸ்தத்தை ஜே.வி.பி எதிர்த்து வந்தது. தற்போது அந்த நிலைப்பாட்டில் எதுவித மாற்றமுமில்லை என ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் நாங்கள் மட்டும் அங்கம் வகிக்கவில்லை. மேலும் பல கட்சிகள் உள்ளன. நோர்வேயின் செயற்பாடுகள் எத்தகையது என்பதை கடந்த கால சம்பவங்கள் கூறுகின்றன. தனி ஒரு கட்சி என்ற வகையில் நோர்வேயின் மத்தியஸ்தத்தை ஜே.வி.பி எதிர்கின்றது என்றார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஜே.வி.பி எக் கட்சியுடனும் கூட்டுச் சேராது தனித்துப் போட்டியிடுவதற்குத் தீர்மானித்துள்ளது. இணைந்துப் போட்டியிடுவது குறித்து சில விடங்களில் இணக்கப்பாட்டினை ஏற்படுத்திக் கொள்ள முடியாததாலேயே தனித்துப் போட்டியிட தீர்மானித்துள்ளோம் என சோமவன்ஸ கூறினார்.

விடுதலைப்புலிகளுடன் ஒவ்வொரு விடயம் தொடர்பாகவும் பேச்சுவார்த்தை நடத்த உத்தேசித்துள்ளோம். அப்பேச்சுக்களின் போது விவாதிக்கப்படும் விடயங்கள் குறித்து மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டு ம்.

அத்துடன் வடக்குக் கிழக்கில் ஜனநாயகத்தை அமுல்படுத்துவது குறித்து பல விடயங்களையும் பேச வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (ச-39)


குளிரூட்டிய நவீன கார் வாடகைக்கு



- திருமணம் (சோடனையுடன்)
- சுற்றுலா
- விசேட வைபவங்கள்

போன்ற அனைத்துத்தேவைகளுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீன கார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:
22,சோமசுந்தரம் அவனியூ
சுண்டுக்குளி ,யாழ்ப்பாணம்

T.P: 0777- 903090
0777- 246117
077- 9172730



ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்.
யாழ்ப்பாணக் கிளை

அடகுப் பொருட்களை மீட்டல்/ விற்பனைக்கான அறிவித்தல்

எமது கிளையில் அடகு சேவை வசதி பெற்ற வாடிக்கையாளர் கவனத்திற்கு,

நீங்கள் பெற்ற அடகுக் கடனுக்குரிய சீட்டின் மறுபக்கத்தில் குறிப்பிட்ட விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய அடகு வைக்கப்பட்டுள்ள பொருட்களை ஒரு வருட காலத்திற்குள் கடன் செலுத்தப்பட்டு மீட்கப்பட வேண்டும் என்பதனை மீண்டும் அறியத் தருகின்றோம்.

உங்களால் பெறப்பட்ட கடனின் முழுப் பகுதியையும் உடனே செலுத்த முடியாவிட்டால் கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் செலுத்தி காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

அடகுக் காலம் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட அடகுப் பொருட்களை மீட்க/ காலாவதித் திகதியை நீடிக்க, ஆவன செய்யாத வாடிக்கையாளர்களின் அடகுப் பொருட்கள் *25.02.2006* அன்று நடைபெறும் ஏலத்தில் விற்பனைக்கு விடப்படும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றோம்.

-முகாமையாளர்.

(c-204)


## வலம்புரியில் வெளியான செய்திக்கு ஆலய குரு மறுப்பு

(யாழ்ப்பாணம்)

13.02.2006 அன்று வலம்புரியின் 10ஆம் பக்கத்தில் வெளியான நயினை நாகபூசணி அம்மன் ஆலயக் குருக்கள் சம்பந்தமான செய்திக்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஆலயக் குருக்கள் அனுப்பிவைத்துள்ள அறிக்கையில், தங்கள் பத்திரிகையில் 13.02. 2006 அன்று பிரசுரிக்கப்பட்ட நயினை நாகபூசணி அம்மன் ஆலயக் குருக்கள் சம்பந்தமான செய்தி தொடர்பாக கீழ்க் கண்ட மறுப்பினை ஆலயக் குரு என்ற வகையில் தங்களுக்கு அறியத் தருகின்றேன்.

மேற்குறித்த செய்தி, மதிப்பும் கௌரவமும் மிக்க குருமார்களை நிந்திப்பதாகவும், அவதூறு விளைவிக்கும் நோக்குடனும் சிருஷ்டிக்கப் பட்டுள்ளது.

பிரஸ்தாப ஆலயத்தின் கணக்காளரான செல்லையா சுதர்ஷன் என்பவர் ஆலயத்திலிருந்து 500 மீற்றர் தொலைவில் துவிச் சக்கரவண்டியில் வந்த போது புளியடிவளைவில் குருக்களின் மகனின் மோட்டார் சைக்கிளுடன் எதிர்பாராத விதமாக முட்டிக் கொண்டார்.

ஆனால் இதில் எவருக்கும் எதுவித காயங்களும் ஏற்படவில்லை. இந்தச் சம்பவத்தை அறிந்த நான் நேரில் சென்று இருவருக்கும் எதுவித காயங்களும் இல்லை என்பதையும் அறிந்தேன். இதனை அவ்வேளையில் அங்கு நின்றவர்களும் அறிவார்கள்.

ஆனால் இதனை தனது வசதிவாய்ப்புக்கு ஏற்ற வகையில் கொடுக்கல் வாங்கல் பிரச்சினையாகத் திரிவுபடுத்தி ஆலயக் கணக்காளர் தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து பொலிஸிலும் முறைப்பாடு செய்துள்ளார்.

குருக்களின் கௌரவம் மற்றும் ஆலய மேன்மையை இழிவுபடுத்தும் வகையில் இச் செய்தி வெளியாகியுள்ளமையால் அதற்கான மறுப்பை பிரசுரிக்குமாறும் கேட்டுக் கொள்கின்றேன் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஞ)

## நாட்டுப்பற்றாளர் சாவு

புதுக்குடியிருப்புப் பகுதியில் 05.02.2006 அன்று ஏற்பட்ட தவறுதலான விபத்தின் போது நாட்டுப்பற்றாளர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

மட்டக்களப்பைச் சொந்த முகவரியாகவும் புளியம்பூமி குடியிருப்பு, வள்ளிபுனம், புதுக் குடியிருப்பை தற்காலிக முகவரியாகவும் கொண்ட சிவசம்பு வடிவேல் என்ற நாட்டுப் பற்றாளரே சாவடைந்தவராவார்.

(சி)

## முஸ்லிம்...

பிரதிநிதியை தெரிவு செய்வதில் அண் மைக் காலமாக இழுபறிநிலை தோன்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(சி)

## உள்ளூராட்சி...

சபைத் தேர்தலில் 90 வீதமானவர்கள் பிக்குகளே போட்டியிடவுள்ளனர். மாநகர சபைகள் மற்றும் நகர சபைகளில் சிரேஸ்ட பௌத்த பிக்குகளே போட்டியிடவுள்ளனர். இதேவேளை ஜாதிக ஹெல உறுமய தனித்து போட்டியிட்டாலும் அரசாங்கத்திற்கு தொடர்ந்து ஆதரவு வழங்கும் எனவும் அவர் கூறினார்.

(ச-39)












இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.[illegible] இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.02.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.